Uva Wellassa University

# වාර්ෂික වාර්තාව
ඌව වෙල්ලස්ස විශ්වවිද්‍යාලය

# Annual Report
Uva Wellassa University

# ஆண்டறிக்கை
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

# 2015



Uva Wellassa University
Passara Road
Badulla.

www.uwu.ac.lk

## தூர நோக்கு

**புதிதுபுனைதல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம், விவசாயத்திலும் கைத்தொழில் துறையிலும் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய தயாரிப்பு நடைமுறைமைகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகள், தொழில் முயற்சியாண்மை, நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள், மற்றும் மருத்துவ விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அறிவை பரவலாக்கம் செய்தல் ஊடாக செழிப்பு மற்றும் நலத்தை அடைவதற்கு தேசிய வளங்களுக்கு பெறுமதி சேர்க்கும் சிறந்த நிலையமாக இருத்தல்**

## பணிக் கூற்று

பொருளாதார செயற்பாடுகளுக்கு பெறுமதி சேர்ப்பதன் மூலமாக தேசிய அபிவிருத்திக்கு நிகரற்ற பங்களிப்பை வழங்குவதற்காக பொருத்தமான அறிவு, அவசியமான திறன்கள், தொழில் முயற்சியாண்மை தகமைகள், சமூகப் பெறுமதிகள் மற்றும் மனப்பாங்கு என்பவற்றுடன் கூடிய முழுத் தொழிற்தகமை மிக்க தொழில்நுட்பசார் மற்றும் தொழில் முயற்சியாண்மைமிக்க முழுத் திறமையான பட்டதாரிகளை உருவாக்குதல்

**பல்கலைக்கழகத்தின் இலக்குகள்**

பல்கலைக்கழகத்தின் இலக்குகள் அது ஆரம்பிக்கப்படும் போதே சிறப்பானதாக தீர்மானிக்கப்பட்டுள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன.

01. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் கல்விசார் செயற்பாடுகளுக்கு இயைபான பொருத்தமான கவர்ச்சிகரமான சூழலை விருத்தி செய்வதில் பல்கலைக்கழகம் கவனம் கொள்கின்றது. செம்மையான கற்பித்தலுக்கான உபகரணங்கள் தொடர்பாடல் சாதனங்கள் முழுமையான தளபாடங்களுடன் கூடிய நவீன விரிவுரைக்கூடங்கள் உபகரணங்கள் முழுமை பெற்ற ஆய்வுசாலைத் தொகுதிகள் மற்றும் கற்பித்தலுக்கும் ஆய்வுகளுக்குமான நூலகங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலமாக இவ் இலக்கு அடையப பெறவிருக்கின்றது.

02. பலமான பெறுமதி சேர்ப்பை வலியுறுத்தும் பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்புடைய மிகத்தரமான பாடச்சேர்க்கைகளை உள்ளடக்கிய புதிய பரந்தவீச்சுக் கொண்ட பட்டக்கற்கைகளை அறிமுகம் செய்கின்ற பல்கலைக்கழகமானது பட்டக்கற்கைகளின் தரத்தை தொடர்ந்து பேணியவாறு பொருளாதார அபிவிருத்தியுடனும் பெறுமதி சேர்ப்புடனும் தொடர்புடைய புதிய பட்டக்கற்கைகளை காலத்துக்கு காலம் அறிமுகப்படுத்தவுள்ளது.

03. சமூகத்தின் சவால்களை சந்திற்கத்தக்கதாக திறன் கொண்ட பட்டதாரிகளாக தம்மை உருவாக்கி கொள்வதற்கான பரந்த கல்வி அவசியமான திறன்கள் மற்றும் தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்கப்படுகின்றது.

04. பல்துறைசார் தன்மைமிக்க பட்டக் கற்கைகளை பல்கலைக்கழகம் விருத்தி செய்து புத்தாக்க மற்றும் நெகிழ்ச்சித் தன்மை மிக்க பொறிமுறைகளின் பயன்பாட்டுடன் வினைத்திறனாகவும் பல்கலைக்கழக முறைமையில் உள்ள மரபுசார்ந்த அறிவுக்குழிகளை உடைத்தும் இக் கற்கைகளை வழங்கவுள்ள அதே நேரம் பல்கலைக்கழக சட்டத்தின் கீழான தேவைகளையும் உறுதிப்படுத்திக் கொண்டு தூரநோக்கை நோக்கி நவீன அணுகுமுறைகளுடன் பல்கலைக்கழகத்தை செலுத்திச் செல்லல்.

05. தேசிய பொருளாதாரா பிரதான இலக்குகளுடன் தொடர்புடைய ஆய்வுகளையும் அபிவிருத்திகளையும் செய்வதுடன் மூன்று பிரதான இலக்குகளில் ஆய்வுத் தொகுப்புக்களை கட்டியெழுப்பல். குறித்த ஆய்வுகளின் அடிப்படையிலான செயற்பாட்டு கற்கை நடவடிக்கைகள், அரச மற்றும் தனியார் துறைகளின் விருப்புக்கு முன்னுரிமை கொடுத்து அறிவைக் கட்டியெழுப்பல் மற்றும் பெறுமதி சேர்ப்பில் மேலதிக ஆய்வுகள் தேவைப்படும் பரப்புக்களை இனங்காணல் என்பனவே அவ் மூன்று இலக்குகள்

06. பட்டதாரிகள்,பட்டப்பின்பட்டதாரிகள்,சிறப்புத்துறையினர் கூட்டாண்மையினர் மற்றும் கல்விச் சந்தையின் தொடர்ச்சி என்பவற்றின் நாடித்துடிப்புக்களை உணர்ந்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யத்தக்க வகையில் கற்கைநெறிகளை விருத்தி செய்தல்.

07. மிக உன்னதமான கல்வித்தகமையுடன் கூடிய சூழலை உருவாக்கி பராமரித்தலுடனும் நிறுவனத்தின் மூலதனத்தை விருத்திசெய்தலும். இது குறிப்பது எதுவெனில் அதி உன்னதமான தொழில் முயற்சியாண்மைத் தலமைத்துவம் பல்லின துறைசார்ந்த அணிகள் மற்றும் தனித்துவமான நிறுவனக் கலாச்சாரம் என்பவற்றை விருத்திசெய்தலாகும்.

08. வழமையான செயற்பாடுகளுக்கு அப்பாலான செயற்பாடுகளை வழங்கும் பின்பற்றத்தக்க சேவை வழங்குனராக வருவதுடன் கல்வி சார் மற்றும் கல்வி சாரா பதவணியினருக்கு செயற்பாடுகளின் முக்கிய நடவடிக்கைகளில் வேலை வழங்குனராக இருப்பதுடன் அவர்களை பல்கலைக்கழகத்தின் தூர நோக்கை பூர்த்தி செய்யத்தக்க விதத்தில் வலுப்படுத்தல். இவ் இலக்கை அடைவதற்காக பல்கலைக்கழகம் அர்ப்பணிப்பு மிக்க திறன்வாய்ந்த விசேட தகமைமிக்க கல்விசார் மற்றும் நிர்வாக பதவணியினரை ஆட்சேர்ப்புச் செய்துள்ளது.

## உள்ளடக்கம்


**எமது தூரநோக்கு ………………………………………………………………………….. i**

**எமது பணிக்கூற்று ………………………………………………………………………….. i**

**பல்கலைக்கழகத்தின் இலக்குகள்……………………………………………………………… ii**

**01. துணைவேந்தரின் செய்தி……………………………………………………………… 1**

**02. பேரவையும் மூதவையும் ……………………………………………………………….. 6**

**2.1 பேரவை - 2015………………………………………………………………………….. 6**

**2.2 மூதவை - 2015…………………………………………………………………………. 7**

**03. நிறுவனக் கட்டமைப்பு – ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்………………………………… 8**

**04. மாணவர் விவகாரங்கள்……………………………………………………………… 9**

4.1 மாணவர்கள் மற்றும் மனித வளங்கள்……………………………………………….. 10

4.2 மாணவர்கள் சேர்க்கை விபரங்கள்……………………………………………………. 11

4.2.1 பட்டப்படிப்பு கற்கைகளுக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட உள்ளூர் மாணவர்கள்………………………………………………………………………… 12

4.2.2 பட்டப்படிப்பு கற்கைகளுக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள்……………………………………………………………………….. 12

4.3 பட்டதாரிகளின் வெளியீடு – 2015……………………………………………………… 13

4.4 விடுதிகள்………………………………………………………………………………… 14

4.4.1 பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான விடுதிகள்…………………………………… 14

4.4.2 வாடகை செலுத்தப்படும் விடுதிகள்………………………………………………… 14

4.5 புலமைப்பரிசில்கள்……………………………………………………………………….. 15

4.5.1 மஹாபொல மற்றும் உதவிக் கொடுப்பனவு – 2015……………………………… 15

4.5.2 வேறு புலமைப்பரிசில்கள்………………………………………………………… 15

**05. மனித வளம்…………………………………………………………………………… 16**

5.1 கல்விசார் பதவியணியினர்…………………………………………………………….. 17

5.2 நிர்வாக உத்தியோத்தர்கள்……………………………………………………………. 18

5.3 கல்விசார் ஆதரவுப் பதவியணியினர் மற்றும் கல்விசாரா பதவியணியினர்………… 18

5.4 ஆதரவுப் பதவியணியினரின் பகிர்வு……………………………………………… 19

**06. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி………………………………………………………… 20**

6.1 ஆய்வுகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள்…………………………………….. 21

6.2 நிகழ்ச்சிகள், செயலமர்வுகள் மற்றும் வேலைப்பட்டறைகள்………………………… 21

6.3 விருதுகளின் விபரம்……………………………………………………………… 21

**07. நிதி மற்றும் கணக்காய்வு…………………………………………………………… 23**

7.1 மீண்டுவரும் செலவினம் பற்றிய விபரங்கள்………………………………………… 24

7.2 மூலதன செலவினம் பற்றிய விபரங்கள்…………………………………………… 24

7.3 கருத்திட்டம் (உள்நாட்டு, வெளிநாட்டு நிதியுதவி பற்றிய விபரங்கள்)…………….. 24

7.4 கருத்திட்ட செலவினம் (உள்நாட்டு, வெளிநாட்டு நிதியுதவி குறித்த விபரங்கள்)….. 25

7.5 நிதிசார் முன்னேற்றம் (செலவினம் ) பற்றிய விபரங்கள்…………………………… 25

7.6 நிதிசார் முன்னேற்றம் (வருமானம் ஈட்டப்பெற்ற) பற்றிய விபரங்கள்……………….. 25

7.7 நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு – 2015………………………………………… 26

7.8 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள்………………………………………………………………………… 26

7.9 2015 டிசம்பரில் உள்ளவாறு நிதிசார் நிலைமைக் கூற்று………………………….. 27

7.10 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று…………………………………………………………….. 28

7.11 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று……………………………………………………………………... 29

7.12 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை…………………………………………… 30

7.13 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்…………………………. 43

## 1. துணைவேந்தரின் செய்தி



ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தொழில் தகமைக்கும் உயர்கல்வி பட்டதாரிகளின் தகமைக்கும் இடையிலிருக்கும் வேறுபாட்டை நிவர்த்தி செய்யும் ஓர் பாலம் எனும் அடிப்படையில் தாபிக்கப்பட்டதாகும். இவ் பல்கலைக்கழகமானது, இலங்கையின் 14வது தேசிய பல்கலைக்கழகமாக 2005 ஜூன் முதலாம் திகதியன்று தாபிக்கப்பட்டது. மரபுசார்ந்த பல்கலைக்கழக முறைமையில் இருந்து முற்றிலும் வேறுபட்டு நவீன கல்விக் கோட்பாடுகள். மற்றும் விசேட திறன்கள் மற்றும் தேர்ச்சிகளுடன் கூடிய பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு என்பவற்றை முதன்மைப்படுத்தியதாக இப் பல்கலைக்கழகம் காணப்படுகின்றது. மதிப்பீட்டாளர்களின் கருத்துக்களின் பிரகாரம் இப் பல்கலைக்கழகமானது நாட்டின் உயர்கல்வி முறைமையில் வேறுபட்ட அடைவைக் காண்பித்துள்ளதுடன் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்ட நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்துள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, அதிசயிக்கத்தக்க வகையில் காண்போர் மனங்களைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் பரந்த காட்சியுடன் கூடிய மலைச்சாரலில் அமைந்துள்ள பதுளை மாநகரின் இதயப் பகுதியில் 59 ஏக்கர் நிலப் பரப்பில் வியாபித்துள்ளது.


ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது நாட்டின் தேசிய வளங்களுக்கு மேலும் பெறுமதி சேர்க்கும் ஆய்வு மற்றும் கற்றல் செயற்பாடுகளில் தனது அதீத கவனத்தை செலுத்திவருகின்றது. நாம் சகல துறை வல்லுனர்களாகவுள்ள தலைவர்களை உருவாக்கிவருகின்றோம். அவர்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக விஞ்ஞான தொழில்நுட்ப தொழில் முயற்சியான்மை திறன்களை அளிக்கவல்லவர்கள்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்ளூர் மற்றும் சர்வதேச தேவைகளுக்கு ஏற்ற பல்வேறு துறைசார் பட்டப்படிப்புக்களை வழங்கும் மூன்று பீடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

| பீடம் | கற்கை நெறி |
|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் |
| | ஏற்றுமதி விவசாயம் |
| | தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் |

| | |
|---|---|
| | பெறுமதி சேர்ப்பும் |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் |
| முகாமைத்துவம் | தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவம் |
| | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் |

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. விவசாயத்தில் பொறியியல் தொழில்நுட்ப இளமாணி, உயிர்முறைத் தொழில்நுட்ப இளமாணி ஆகிய கற்கைகள் தொழில்நுட்ப கற்கைகளின் கீழ் தாபிக்கப்படவுள்ளன.





*படம் பட்டதாரிகளின் குடித்தொகை (2011 - 2016)*

பல்கலைக்கழகத்தினால் கருதத்தக்க சில இலக்குகளை அடைய முடிந்துள்ளதுடன் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப மாணவர்களின் அனுமதியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டு மாணவர்களின் மொத்த எண்ணிக்கையானது 1978 ஆக இருப்பதுடன் கல்விசார், நிர்வாக மற்றும் மற்றைய ஆளணியினரின் எண்ணிக்கை 225 ஆகவும் இருந்தது.


பரந்த பொதுக்கல்வி முறைமையானது மாணவர்களுக்கு பலமான ஒரு அடித்தளத்தை வழங்குகின்றது. பல மொழிச்சூழல் மாணவர்களுக்கிடையில் இருக்கும் மொழி தொடர்பிலான தடைகளை அகற்ற உதவும் பாலமாகவுள்ளது. கணிசமான எண்ணிக்கையான மாணவர்கள் மிகவும் சிறந்த முறையில் சிறந்த சூழலுடன் நிர்வகிக்கப்படும் விடுதி வசதிகளை அனுபவித்து மகிழ்கின்றனர். கலாசார மற்றும் சமூக விழுமியங்களை மாணவர்களிடத்தே கட்டியெழுப்புவதற்கு தேவையான அனைத்து விடயங்களையும் ஒரு வதிவிட பல்கலைக்கழகம் எனும் அடிப்படையில் வழங்குவதற்கு பல்கலைக்கழகம் முயற்சித்த வண்ணமேயுள்ளது. வேலைவாய்ப்புத் தேவைகளை பட்டதாரிகள் பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான மேலதிக கலைத்திட்டம் தொடர்பான ஆலோசனை கைத்தொழில்துறையிடமிருந்தும் பொறுப்புதாரர்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ளது.

| **கற்கை நெறியின் தலைப்பு** | **ஆண்டு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| விலங்கு விஞ்ஞானம் | 29 | 36 | 50 | 35 | 42 |
| ஏற்றுமதி விவசாயம் | 32 | 48 | 37 | 31 | 43 |
| தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | -- | 40 | 42 | 37 | 43 |
| நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | -- | -- | 47 | 39 | 39 |
| பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | -- | -- | 39 | 38 | 44 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 38 | 38 | 35 | 41 | 35 |
| கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 36 | 43 | 39 | 40 | 42 |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | -- | 41 | 40 | 43 | 40 |
| கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | -- | 49 | 36 | 34 | 31 |
| தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவம் | 38 | 52 | 47 | 47 | 49 |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | -- | -- | 32 | 51 | 42 |
| **மொத்தம்** | **173** | **337** | **444** | **436** | **450** |

கடந்த ஐந்து பிரிவு பட்டதாரிகளும் நாட்டின் வேலைவாய்ப்பு கட்டமைப்புக்குள் மிகவும் வேகமாக உள்வாங்கப்பட்டுள்ளனர். இவ் பதிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகமானது தனது வேலைவாய்ப்பு சதவீதத்தை 80% தொடக்கம் 100% வரை பேணிக்கொள்கின்றது. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழமானது தனது பட்டதாரிகளுக்கு வளமான வெற்றிகரமான எதிர்காலத்தை வழங்க வல்ல வேலைவாய்ப்பு உறுதியை வழங்கவல்லதாக திகழ்கின்றது.




திறந்த தொலைக்கல்வி கற்கைக்கான நிலையமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுடபம் மற்றும் ஆங்கிலம் ஆகிய துறைகளில் ஊவா மாகாணத்தின் பொறுப்புதாரர்களுக்கு சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கைகளை வழங்கவல்லதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவ பீடத்தின் கீழ் வெளிவாரிப்பட்டப்படிப்புக்களை வழங்குவதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டும் உள்ளன.



ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தனது சேவை வழங்கல் துறைகளில் பல்கலைக்கழக பதவியணியினரால் மேற்கொள்ளப்படும் ஆய்வுத்துறையை ஒரு முக்கிய தூணாக கொண்டுள்ளது. ஆய்வுகளும் கண்டுபிடிப்புக்களும் மற்றும் வெளியீடுகளும் திருப்திகரமான மட்டத்தில் உள்ளதுடன் ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 342 வெளியீடுகளும் 05 உள்ளுர் மற்றும் சர்வதேச விருதுகளும் பெறப்படுகின்றன. ஆய்வின் கண்டறிவுகளை ஆற்றுகை செய்வதற்கான ஆய்வு அமர்வுகள் மிகக் குறுகிய கால இடைவெளிகளில் நடாத்தப்படுவதனால் இளம் ஆய்வாளர்கள் தமது கண்டறிவுகளை ஆய்வுச் சமூகத்துக்கு முன்னளிக்கை செய்வதன் மூலமாக தமது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்துக் கொள்ள முடிகின்றது. பல்கலைக்கழத்தின் ஆய்வுகளானது தேசிய வளங்களின் அபிவிருத்திக்கும் சமூக நலன்புரித் திட்டங்களுக்கும் நேரடியாக பங்களிப்புச் செய்கின்றன.

பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் அபிவிருத்தி நிலையமானது விஞ்ஞான மற்றும் ஆய்வு எழுதுகை தொடர்பில் வேலைப்பட்டறைகளை நடாத்துவதில் கவனமெடுத்து செயற்பட்டுவருகின்றது. கல்விசார் பதவிணியினருக்கு பாதீட்டின் தன்மைக்கு உட்பட்டு ஆய்வு நிதியுதவிகள் வழங்கப்பட்டுமுள்ளன.

அநேகமான கல்விசார் மற்றும் கல்விசாரா பதவிகள் நிரப்பப்பட்டுள்ளதுடன் அடுத்த வருடத்துக்கான மேலதிக மனித வலுத்தேவை தொடர்பிலும் திறைசேரிக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

| **பதவணியினர்** | | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
|---|---|---|---|---|---|---|
| கல்விசார் பதவியணியினர் | பேராசிரியர்கள் | 01(வருகைதரு அடிப்படையில்) | -- | -- | -- | -- |
| | சிரேஸ்ட விரிவுரையாளர் | 11 | 10 | 13 | 21 | 38 |
| | விரிவுரையாளர் /விரிவுரையாளர் (தகுதிகாண்) | 75 | 75 | 78 | 68 | 63 |
| நிர்வாக உத்தியோகத்தர் | | 12 | 15 | 13 | 16 | 15 |
| உதவி ஆளணியினர் | | 04 | 04 | 04 | 04 | 40 |
| **மொத்தம்** | | **102** | **104** | **108** | **109** | **156** |


முன்னர் இருந்த செயற்பாட்டு உதவியாளர் முறைமை தொடர்ந்து பின்பற்றப்படாமல் பயிலுனர்களின் சேவையானது ஆறு மாத காலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய


நவீன முகாமைத்துவக் கோட்பாடுகளை கருத்தில் எடுத்து பாதுகாப்பு சேவை சுத்திகரிப்பு சேவை மற்றும் சில செயற்பாட்டு சேவைகள் பல்கலைக்கழகத்தினால் வெளிசேவை வழங்குனர்களிடமிருந்து பெறப்படுகின்றது. இதன் மூலம் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த இளையவர்களுக்கு பல்கலைக்கழத்தில் பயிற்சிகளை வழங்கக் கூடியதாகவுள்ளது.

உட்கட்டுமான அபிவிருத்தியின் கீழ், புதிய விளையாட்டுத் தொகுதியும் பார்வையாளர் அரங்கும் தாபிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக விளையாட்டு பிரிவானது நவீன மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் விளையாட்டு செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கான புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அவை மாணவர்களினால் பயன்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. புதிய மூதவைக்கட்டடமானது 150 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்கு நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தர நிர்ணய பிரிவும் தொழில் வழிகாட்டல் பிரிவும் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் பணிப்பாளர்களாக பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டு கற்கை நெறிகளின் தரத்தை மேம்படுத்தவும் தொழில் வழிகாட்டல் சந்தைகளை தொடர்ச்சியாக நடாத்தி எதிர்கால வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் மாணவர்களை பயிற்றுவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**2015ம் ஆண்டின் நிதிசார் செயற்பாடுகளின் விபரம் வருமாறு**




2016-2020 காலப்பகுதிக்கான கூட்டாண்மைத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டதுடன் அவையிரண்டும் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டுமுள்ளன. அத்துடன் கூட்டாண்மை திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தின் அமுல்படுத்துகை தொடர்பாக கண்காணிப்பதற்கு என கண்காணிப்பு மற்றும் பரீசீலனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி. ஜீ. சந்திரசேன
துணைவேந்தா்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

# 02. பேரவையும் மூதவையும்

## 2.1 பேரவை – 2015

**துணைவேந்தர்**

கலாநிதி. ஜீ. சந்திரசேன

**பீடங்களின் பீடாதிபதிகள்**

| | |
|---|---|
| கலாநிதி எஸ்.சி.ஜெயமான்ன | விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் |
| கலாநிதி ஏ.எம்.ஏ.என்.பி.அத்தநாயக்க | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (17.07.2015 வரை) |
| கலாநிதி இ.பி.எஸ்.கே. எதிரிவீர | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (21.08.2015 தொடக்கம்) |
| கலாநிதி பி.ஐ.என். பெர்ணாண்டோ | முகாமைத்துவம் |

**மூதவைப் பிரதிநிதிகள்**

கலாநிதி கே.பி. விஜயசேகர

கலாநிதி எல்.எம்.எச்.ஆர் அல்விஸ்

**பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு நியமன உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| வண. முறுதெனிய தர்மரத்தின தேரர் | (14.03.2015 வரை) |
| திரு. ஆர். திசாநாயக்க | (20.04.2015 வரை) |
| திரு. எஸ்.எம்.ஜெயதிலக்க | (13.03.2015 வரை) |
| வைத்திய கலாநிதி எம்.கே.டி சேனநாயக்க | (20.04.2015 வரை) |
| திரு. பி.ஜீ.ரத்தினநாயக்க | (13.03.2015 வரை) |
| திரு.எல்.ஜீ.எல்.ஜீ. குணதிலக்க | (20.04.2015 வரை) |
| திரு.எம்.எம்.வி.பீரிஸ் | (20.04.2015 வரை) |
| வைத்திய கலாநிதி கே.பி.கல்கெட்டிய | (23.09.2015 வரை) |
| வைத்திய கலாநிதி டபிள்யு. அபேயக்கோன் | (20.04.2015 இலிருந்து) |
| திரு.ரி.நந்தசேனா | (20.04.2015 இலிருந்து) |
| வைத்திய கலாநிதி ஏ.குணவர்த்தன | (20.04.2015 இலிருந்து) |
| திரு.என்.அபயசிறி | (20.04.2015 இலிருந்து 16.10.2015 வரை) |
| திரு.எச்.தயாவன்ச | (20.04.2015 இலிருந்து) |

## 2.2 மூதவை -2015

**துணைவேந்தர்**

கலாநிதி. ஜீ. சந்திரசேன

**பீடங்களின் பீடாதிபதிகள்**

| | |
|---|---|
| கலாநிதி எஸ்.சி.ஜெயமான்ன | விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் |
| கலாநிதி ஏ.எம்.ஏ.என்.பிஅத்தநாயக்க | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (17.07.2015 வரை) |
| கலாநிதி இ.பி.எஸ்.கே.எதிரிவீர | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும(21.08.2015 தொடக்கம்) |
| கலாநிதி பி.ஐ.என். பெர்ணாண்டோ | முகாமைத்துவம் |


**துறைத் தலைவர்கள்**

| | |
|---|---|
| கலாநிதி டி.கே.டி.டி. ஜெயசேனா | விலங்கு விஞ்ஞானம் |
| கலாநிதி எல்.எம்.எச்.ஆர் அல்விஸ் | ஏற்றுமதி விவசாயம் |
| கலாநிதி கே.பி. விஜயசேகர | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| கலாநிதி இ.பி.எஸ்.கே. எதிரிவீர | கணணி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (பதில்) |
| திரு.ஜீ.எச்.அபேயவீர | முகாமைத்துவ விஞ்ஞானம் |
| கலாநிதி எச்.ஆர்.என்.பீரிஸ் | பொது நிர்வாகம் |

**பீடங்களின் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| செல்வி பி.வி.ஏ.ஐ.கே.புளுமுள | விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் |
| கலாநிதி.ஆர்.ஆர்.எம்.கே.கே.விஜயசுந்தர | விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் 01.10.2015 - 31.12.2015 |
| செல்வி.ஆர்.எம்.சி.டபிள்யு.எம்.ரத்தினாயக்கா | விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் |
| கலாநிதி பி.எம்.சிறிமான்னே | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| கலாநிதி ஏ.ஆர்.குமாரசிங்க | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| கலாநிதி பி.எச்.ரி குமார | முகாமைத்துவம் |
| திரு. எம்.ரூபவதனன் | முகாமைத்துவம் |
| செல்வி டி.பி.சி விதான | உதவி நூலகர் |

## 03. நிறுவன கட்டமைப்பு – ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்



# 4.

# மாணவர் விவகாரங்கள்

- மாணவர் சேர்க்கை
- புதிய அனுமதிகள்
- வெளிநாட்டு மாணவர்கள்
- பட்டதாரிகள் வெளியீடு
- விடுதி வசதிகள் - பல்கலைக்கழகத்துக்கு உடமையானது தனியார் வாடகை விடுதிகள்
- புலமைப்பரிசில்கள் - மஹாபொல உதவிக் கொடுப்பனவு மற்றும் மற்றைய புலமைப்பரிசில்கள்

## 4.1 மாணவர்கள் மற்றும் மனித வளங்கள்

| பீடம் | கற்கை நெறி | மாணவர்கள் மொத்த எண்ணிக்கை | கல்விசார் பதவியினரின் மொத்த எண்ணிக்கை | கல்விசாராப் பதவியினரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | 186 | | மூன்று பீடங்கள் மற்றும் பொது நிருவாகம் ஆகியவற்றினால் பகிர்ந்து கொள்ளப்பட்டவர்களாக 40 கல்விசாராப் பதவியினரும் 15 நிருவாகப் பதவியினரும் இருந்தனர். |
| | ஏற்றுமதி விவசாயம் | 169 | | |
| | தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | 136 | | |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | 154 | 68 | |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | 144 | | |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 185 | | |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 215 | | |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 194 | 72 | |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | 169 | | |
| முகாமைத்துவம் | தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவம் | 214 | | |
| | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | 212 | 27 | |
| **மொத்தம்** | | **1978** | **167** | |

## 4.2 மாணவர்கள் சேர்க்கை விபரங்கள்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் 2015ம் ஆண்டு முன்மொழியப்பட்டதற்கமைய மாணவர் உள்ளீர்பை அதிகரித்துள்ளது. அதன்பிரகாரம் ஊவா வெல்லஸ்ஸ விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்துக்கும் கணணி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடத்துக்கும் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் 60 மாணவர்களையும் முகாமைத்துவ கற்கை நெறிக்கு 65 மாணவர்களையும் உள்ளீர்க்கின்றது. இவர்கள் க.பொ.த உயர்தரத்தில் காண்பித்த திறமைகளின் அடிப்படையிலும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் நுண்மதிப் பரீட்சையில் காண்பித்த திறமைகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 1ஆம் வருட மாணவர்கள் (2013/2014) | 2ஆம் வருட மாணவர்கள் (2012/2013) | 3ஆம் வருட மாணவர்கள் (2011/2012) | 4ஆம் வருட மாணவர்கள் (2010/2011) |
|---|---|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | ஆங்கிலம் | 48 | 47 | 47 | 44 |
| | ஏற்றுமதி விவசாயம் | | 50 | 39 | 43 | 37 |
| | தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | | 36 | 36 | 23 | 41 |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | | 38 | 42 | 34 | 40 |
| | பனை மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | | 42 | 33 | 24 | 45 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 43 | 50 | 49 | 43 |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 51 | 49 | 67 | 48 |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | | 62 | 49 | 38 | 45 |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | | 52 | 43 | 32 | 42 |
| முகாமைத்துவம் | தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவமும் | | 60 | 53 | 52 | 49 |
| | விருந்தோம்பல் சுற்றுலாத் துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | | 62 | 48 | 55 | 47 |
| **மொத்தம்** | | | **544** | **489** | **464** | **481** |


### 4.2.1 பட்டப்படிப்புக் கற்கைகளுக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் - உள்ளூர்

| பீடம் | கற்கைநெறி | அனுமதித்த ஆண்டு | ஏற்றுக் கொள்ளப்பட்டஅனுமதி | பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | 2013/2014 | 60 | 48 |
| | ஏற்றுமதி விவசாயம் | | 60 | 50 |
| | தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | | 60 | 36 |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | | 60 | 38 |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | | 60 | 42 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 60 | 43 |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 60 | 51 |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | | 60 | 62 |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | | 60 | 52 |
| முகாமைத்துவம் | தொழில்முயற்சியாண்மை மற்றும் முகாமைத் முகாமைத்துவமும் | | 65 | 60 |
| | விருந்தோம்பல் சுற்றுலாத் துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | | 65 | 62 |

### 4.2.2 பட்டப்படிப்புக் கற்கைகளுக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள்

| பீடம் | கற்கைநெறி | அனுமதித்த ஆண்டு | நாடு | பதிவு செய்த மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 2013/2014 | பாகிஸ்தான் | 02 |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | | | 01 |


**2015ம் ஆண்டு புதிய அனுமதிக்கான பால்நிலை பரம்பல் (2013/2014 பிரிவு)**




### 4.3 பட்டதாரிகளின் வெளியீடு -2015

| பட்டக் கற்கையின் பெயர் | 2015ம் ஆண்டு | | |
|---|---|---|---|
| | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
| விலங்கு விஞ்ஞானம் | 22 | 20 | 42 |
| ஏற்றுமதி விவசாயம் | 11 | 32 | 43 |
| தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | 22 | 21 | 43 |
| நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | 15 | 24 | 39 |
| பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | 19 | 25 | 44 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 15 | 20 | 35 |
| கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 22 | 30 | 42 |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 12 | 28 | 40 |
| கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | 12 | 19 | 31 |
| தொழில்முயற்சியாண்மை மற்றும் முகாமைத் முகாமைத்துவம் | 17 | 32 | 49 |
| விருந்தோம்பல் சுற்றுலாத் துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | 15 | 27 | 42 |
| **மொத்தம்** | **182** | **268** | **450** |

**2015 பட்டதாரிகளின் வெளியீடு பால்நிலை பரம்பல் (2010/2011 பிரிவு)**




### 4.4. விடுதிகள்

#### 4.4.1 பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான விடுதிகள்

| பெயர் | அமைவிடம் | கொள்ளளவு | | | ஒரு மாணவருக்கான வருடாந்த கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| கோரல் பியூட்டி | பல்கலைக்கழக வளாகம் | 129 | -- | 194 | 5000.00 |
| சில்வர் டிப்ஸ் | | 65 | -- | | |
| புளு சவாயர் | | -- | 138 | 276 | |
| கற்றாலியா | | -- | 138 | | |

#### 4.4.2 வாடகை செலுத்தப்படும் விடுதிகள்

| அமைவிடம் | ஆண்டு வாடகை ரூபாயில் | தங்கியிருந்த மாணவர்கள் எண்ணிக்கை 31.12.2015 இல் | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| மகாவலி | 270,000.00 | 16 | | 48 |
| நக்கிள்ஸ் | 252,000.00 | 14 | | |
| ரபுபொத்த | 352,800.00 | 18 | | |
| கிம்கான | 240,000.00 | | 09 | 120 |
| ஹன்தான | 300,000.00 | | 15 | |
| ஹன்வெல | 277,200.00 | | 13 | |

| | | | | |
|---|---|---|---|---|
| களனி - ஏ | 192,780.00 | | 10 | |
| களனி பி | 192,780.00 | | 11 | |
| வலவ | 207,900.00 | | 10 | |
| சமனல - 1 | 611,100.00 | | 27 | |
| சமனல -2 | 259,344.00 | | 09 | |
| சமனல -3 | 264,000.00 | | 09 | |
| கலுகல்பிட்டிய | 120,000.00 (6 மாதங்களுக்கு) | | 7 | |
| **மொத்தம்** | **3,539,904.00** | **48** | **120** | **168** |

### 4.5 புலமைப்பரிசில்கள்

### 4.5.1. மஹாபொல மற்றும் உதவிக் கொடுப்பனவு – 2015

| பீடம் | அனுமதி ஆண்டு | கற்கை ஆண்டு | பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மஹாபொல | உதவிக்கொடுப்பனவு |
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | 2013/2014 | முதலாம் வருடம் | 26 | 78 |
| | 2012/2013 | இரண்டாம் வருடம் | 63 | 34 |
| | 2011/2012 | மூன்றாம் வருடம் | 71 | 10 |
| | 2010/2011 | நான்காம் வருடம் | 43 | 70 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 2013/2014 | முதலாம் வருடம் | 53 | 35 |
| | 2012/2013 | இரண்டாம் வருடம் | 81 | 11 |
| | 2011/2012 | மூன்றாம் வருடம் | 74 | 17 |
| | 2010/2011 | நான்காம் வருடம் | 62 | 41 |
| முகாமைத்துவம் | 2013/2014 | முதலாம் வருடம் | 17 | 63 |
| | 2012/2013 | இரண்டாம் வருடம் | 51 | 12 |
| | 2011/2012 | மூன்றாம் வருடம் | 18 | 32 |
| | 2010/2011 | நான்காம் வருடம் | 17 | 65 |
| **மொத்தம்** | | | **576** | **468** |

### 4.5.2 வேறு புலமைப்பரிசில்கள் - 2015

| பீடம் | புலமைப் பரிசிலின் பெயர் | புலமைப்பரிசில் பெற்றுக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | வேந்தர் புலமைப்பரிசில் | 126 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 107 |
| முகாமைத்துவம் | | 56 |

# 5.

# மனித வளம்

- கல்விசார் பதவியணியினர்
- நிர்வாக உத்தியோகத்தர்கள்
- கல்விசார் ஆதரவுப் பதவியணியினர் மற்றும் கல்விசாரா பதவியணியினர்

## 5.1 கல்விசார் பதவியினர்

| பீடம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர்கள் | பேராசிரியர்கள் | சிரேஷ்ட விரிவுரையாளர்கள் தரம் 1 தரம் 2 | விரிவுரையாளகள் | தகுதிகாண் விரிவுரையாளர்கள் | தற்காலிக விரிவுரையாளர்கள் / செய்முறை வழிகாட்டுனர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் | ஆங்கிலம் | - | - | 15 | 01 | 30 | 22 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | - | - | 14 | - | 16 | 42 |
| முகாமைத்துவம் | ஆங்கிலம் / ஆங்கிலம்/ சிங்களம்/தமழ் | - | - | 09 | 05 | 08 | 05 |
| நூலகம் | | - | - | - | - | 03 (உதவி நூலகர்கள்) | - |
| **மொத்தம்** | | - | - | 38 | 06 | 57 | 69 |

### 5.2. நிருவாகப் பதவியினர்

2015ம் ஆண்டுக்கான ஒவ்வொரு பதவி வகையிலும் சேவையாற்றிய நிருவாகப் பதவியினரின் எண்ணிக்கை பின்வருமாறு

| **பதவி வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **நிரப்பப்பட்ட ஆளணி** | **குறிப்புக்கள்** |
|---|---|---|---|
| பதிவாளர் | 1 | 1 | ஒப்பந்த அடிப்படையில் |
| நிதியாளர் | 1 | 1 | - |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | 7 | 5 | 3 உதவிப் பதிவாளர்கள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஆளணியில் உள்ளனர். |
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | 4 | 4 | - |
| சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| வேலைகள் பொறியியலாளர் | 1 | 1 | வருகைதரு பொறியிலாளர் மூலம் சேவைகள் பெறப்படுகின்றன. பொறியியலாளர் தெரிவு செய்யப்பட்டு ப.மா.ஆ அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| பிரதம பாதுகாப்பு அதிகாரி (ஒப்பந்த அடிப்படையில்) | 1 | 1 | நிரந்தர பி.பா.அ தெரிவு செய்யப்பட்டு ப.மா.ஆ அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| பிரதம ஒழுக்காற்று அதிகாரி | 1 | 0 | - |
| உடற்கல்விப் பணிப்பாளர் | 1 | 0 | நிரந்தர உ.க.ப தெரிவு செய்யப்பட்டு ப.மா.ஆ அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| துணைவேந்தரின் பிரத்தியேகச் செயலாளர் | 1 | 0 | வெற்றிடம் |
| பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | 2 | 1 | வெற்றிடம் 1 |
| முழு நேர விடுதிக்காப்பாளர்கள் | 1 | 0 | கல்விசார் விடுதிக்காப்பாளரினால் கடமைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| மொத்தம் | **22** | **15** | |

### 5.3 கல்விசார் ஆதரவு மற்றும் கல்விசாரா பதவியணியினர்

| **பதவி வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **நிரப்பப்பட்ட ஆளணி** | **குறிப்புக்கள்** |
|---|---|---|---|
| நிகழ்ச்சியாளர் மற்றும் தொகுதி ஆய்வாளர் | 2 | 1 | ஒப்பந்த அடிப்படை |
| உடற்கல்வி போதனாசிரியர் | 2 | 1 | -- |
| போதனாசிரியர் (கணனி தொழிநுட்பம்) | 4 | 0 | -- |
| உப காப்பாளர் (முழுநேரம்) | 4 | 1 | -- |
| ஒழுக்காற்று அதிகாரி | 1 | 0 | -- |
| மேற்பார்வையாளர் (சிவில்) | 1 | 1 | ஒப்பந்த அடிப்படை |
| கணக்காய்வு உதவியாளர்கள் | 1 | 1 | -- |
| புத்தக காப்பாளர் | 1 | 0 | -- |
| மருந்தகவியலாளர் | 1 | 1 | -- |
| தாதியர் | 2 | 0 | -- |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 12 | 2 | -- |
| கணணிப் பிரயோக உதவியாளர் CAA | 27 | 22 | -- |

| | | | |
|---|---|---|---|
| சுருக்கெழுத்தாளர்(ஆங்கிலம்) | 5 | 5 | -- |
| தொலைபேசி இயக்குனரும் வரவேற்பாளரும் | 2 | 0 | -- |
| நூலக உதவியாளர் | 3 | 1 | -- |
| காசாளர் | 2 | 0 | கணனிப் பிரயோக உதவியாளரினால் பதிலீடு செய்யப்பட்டுள்ளது |
| இலிகிதர் | 6 | 1 | -- |
| களஞ்சிய காப்பாளர் | 2 | 1 | -- |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | 1 | 0 | -- |
| பண்ணை மேற்பார்வையாளர் | 1 | 0 | -- |
| விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் | 3 | 0 | -- |
| தொழிலாளி | 4 | 2 | -- |
| மின்னியலாளர் | 1 | 0 | -- |
| நீர்க்குழாய் பொருத்துனர் | 1 | 0 | -- |
| தச்சுத்தொழிலாளி | 1 | 0 | -- |
| சீர்செய்யுனர் | 1 | 0 | -- |
| பரிசாரகர் (சுகாதாரம்) | 1 | 0 | -- |
| ஆய்வுகூட உதவியாளர் | 10 | 0 | -- |
| சாரதி | 2 | 0 | -- |
| **மொத்தம்** | **104** | **40** | |

## 5.4 ஆதரவுப் பதவியினரின் பகிர்வு

| பீடம்/கிளை | சிரேஷ்ட பதவியினர் | கனிஷ்ட பதவியினர் | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|
| துணைவேந்தர் அலுவலகம் | -- | 03 | -- |
| பதிவாளர் அலுவலகம் | -- | 02 | -- |
| விலங்கு விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம் | -- | 02 | -- |
| விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப பீடம் | 01 | 02 | 02 |
| முகாமைத்துவ பீடம் | - | 01 | -- |
| மாணவர் நலச்சேவைகள் பிரிவு | 03 | 02 | -- |
| மனிதவளப் பிரிவு | -- | 02 | -- |
| பொது நிருவாகப் பிரிவு | -- | 02 | -- |
| பரீட்சைகள் பிரிவு | -- | 04 | -- |
| சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அலுவலகம் | -- | 02 | -- |
| நிதிப் பிரிவு | 01 | 08 | -- |
| நூலகம் | -- | 01 | -- |
| மருத்துவ நிலையம் | -- | 01 | -- |
| கருத்திட்ட அலுவலகம் | - | 01 | |
| **மொத்தம்** | **05** | **33** | **02** |

* சிற்றூழியர்களின் சேவைகள் சேவை வழங்குநர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டன.

# 6.

# ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

- **ஆய்வுகள், புத்தாக்கங்கள், மற்றும் வெளியீடுகள்**
- **நிகழ்ச்சிகள், செயலமர்வுகள், வேலைப்பட்டறைகள்**
- **விருதுகளின் விபரம்**

### 6.1 ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள்

2015 வருட காலத்திலான பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | வெளியிடப்பட்டவை | முன்னளிக்கை செய்யப்பட்டவை |
|---|---|---|
| பருவ இதழ் கட்டுரைகள் எண்ணிக்கை | 100 | -- |
| நூல்கள்/ நூல் அத்தியாயங்கள் எண்ணிக்கை | 09 | -- |
| மாநாடுகளின் ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட முழு ஆய்வுக்கட்டுரைகள் | 24 | -- |
| ஆய்வுச் சுருக்கங்களின் எண்ணிக்கை | 181 | 181 |
| சுவரொட்டிகள் | 11 | 11 |
| புத்தாக்கங்கள்/உற்பத்தி அபிவிருத்தி எண்ணிக்கை | 2 | -- |
| உற்பத்தி மேம்பாடுகளின் எண்ணிக்கை | 18 | -- |
| முதல்மாதிரி வடிவமைப்பும் அபிவிருத்தியும் | 1 | 1 |
| **மொத்தம்** | **444** | **193** |

### 6.2. நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| விடயம் | பங்கேற்பு / வழங்கப்பட்டவை | பூரணப்படுத்தப்பட்டவை |
|---|---|---|
| பல்கலைக்கழகப் பட்ட நிகழ்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | 11 | -- |
| சான்றிதழ் கற்கைநெறி திட்டங்களின் எண்ணிக்கை | 05 | -- |
| சமூக சேவைசார் நிகழ்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | -- | 18 |
| பதவியினர் அபிவிருத்தி கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் | -- | 09 |
| **மொத்தம்** | **16** | **27** |

### 6.3 கிடைக்கப் பெற்றுள்ள விருதுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | விருதுகள் எண்ணிக்கை | கல்விசார் பதவியினர் எண்ணிக்கை |
|---|---|---|
| உள்நாட்டு விருதுகள் | 05 | 05 |
| சர்வதேச விருதுகள் | -- | - |
| **மொத்தம்** | **05** | **05** |

**2015 இல் கிடைக்கப் பெற்ற விருதுகள் பற்றிய விபரங்கள்**

| **விருந்தின் விபரம்** | **பெற்றுக் கொண்டவர்** | **பீடம்** |
|---|---|---|
| விஞ்ஞான ஆய்வுக்கட்டுரைக்கான ஜனாதிபதி விருது | கலாநிதி.டி.கே.டி.டி ஜெயசேனா | விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் |
| பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டபின் கற்கைகள் நிறுவனத்தின் 27 வது வருடாந்த மாநாட்டில் விலங்கு விஞ்ஞானப் பிரிவில் சிறந்த முன்வைப்பாளருக்கான விருது | திருமதி. என்.எம்.என். நம்பபான | |
| பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டபின் கற்கைகள் நிறுவனத்தின் 27 வது வருடாந்த மாநாட்டில் சகலதுறை சிறந்த முன்வைப்பாளருக்கான விருது | திருமதி. என்.எம்.என். நம்பபான | |
| விஞ்ஞான ஆய்வு வெளியீட்டுக்கான தேசிய ஆய்வுப் பேரவையின் விருது | கலாநிதி கே.பி.விஜயசேகர | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| விஞ்ஞான ஆய்வு வெளியீட்டுக்கான தேசிய ஆய்வுப் பேரவையின் விருது | கலாநிதி இ.பி.எஸ்.கே.எதிரிவீர | |

# 7.

# நிதி மற்றும் கணக்காய்வு

- மீண்டுவரும் செலவீனம் மற்றும் மூலதனச் செலவீனம்
- கருத்திட்டம் செலவீனங்கள் (உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிதியீட்டம்)
- நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவினம்)
- நிதிசார் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமான விபரங்கள்)
- நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு 2015
- கிடைக்கப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் குறித்த விபரங்கள் - 2015
- 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலமைக் கூற்று
- 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று
- 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று
- கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை
- கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

### 7.1 மீண்டுவரும் செலவீனம் பற்றிய விபரங்கள்

ரூபா

| விடயம் | 2015 | 2014 |
|---|---|---|
| அ. தனிநபர் வேதனாதிகள் | 213,723,414 | 159,510,038 |
| ஆ. பிரயாணம் | 1,004,694 | 1,484,599 |
| இ. வழங்கல்கள் | 10,315,367 | 9,223,701 |
| ஈ. பராமரிப்பு | 3,659,271 | 2,962,331 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 108,599,062 | 119,325,799 |
| ஊ. ஏனையவை | 27,172,161 | 18,602,962 |
| **மொத்தம்** | **364,473,969** | **311,109,430** |

### 7.2 மூலதன செலவீனம் பற்றிய விபரங்கள்

ரூபா

| விடயம் | 2015 | 2014 |
|---|---|---|
| அ. நிலம் கையகப்படுத்துகை | 50,000 | 8,525,000 |
| ஆ. தளபாட மற்றும் ஏனைய உபகரணக் கையகப்படுத்துகை | 16,872,165 | 9,503,706 |
| இ. இயந்திராதிகள் கையகப்படுத்துகை | 23,078,162 | 20,281,326 |
| ஈ. கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் கையகப்படுத்துகை | 129,212,005 | 116,769,530 |
| உ. ஏனையவை | 6,507,281 | 3,157,270 |
| **மொத்தம்** | **175,719,613** | **158,236,832** |

### 7.3 கருத்திட்ட (உள்நாட்டு.'. வெளிநாட்டு நிதியீட்டம்) விபரங்கள்

ரூபா.மில்லியன்

| பெயர்/ விபரங்கள் | கடன்/ மானியம் | நிதியளிப்பு முகவரமைப்பு # | TCE | RFA | DF |
|---|---|---|---|---|---|
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கருத்திட்ட கட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் ஸ்தாபகம் | - | - | 3,420.00 | - | ✓ |
| **மொத்தம்** | - | - | **3,420.00** | - | - |

### 7.4 கருத்திட்ட செலவினம் (உள்ளூர் ∴ வெளிநாட்டு நிதியீட்டம்)

ரூபா.மில்லியன்

| பெயர் | TCE | 2015 இல் ஏற்பட்ட செலவீனம் | 2014 இல் ஏற்பட்ட செலவீனம் | 31.12.2015இல் உள்ளவாறான ஒட்டு மொத்த செலவீனம் | பௌதிக முன்னேற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கருத்திட்ட, கட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் ஸ்தாபகம் | 3,420 | 122.87 | 70.80 | 2,023.37 | 70% |
| **மொத்தம்** | **3,420** | **122.87** | **70.80** | **2,023.37** | **70%** |

### 7.5 நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவீனம்)

ரூபா

| விடயம் | 2015 இல் ஏற்பாடு | 2015 இல் செலவீனம் | சேமிப்புக்கள்/ (மிகை) |
|---|---|---|---|
| அ. கருத்திட்டம் தவிர்ந்த மீண்டுவரும் செலவீனம் | 450,000,000 | 358,901,383 | 91,098,617 |
| ஆ.கருத்திட்டம் தவிர்ந்த மூலதன செலவீனம் | 115,000,000 | 52,849,494 | 62,150,506 |
| இ. கருத்திட்டம் உள்நாட்டு நிதியீட்டம் | 145,000,00 | 122,870,119 | 22,129,881 |
| ஈ. கருத்திட்டம், வெளிநாட்டு நிதியீட்டம் | - | - | - |
| **மொத்தம்** | **710,000,000** | **534,620,996** | **175,379,004** |

### 7.6 நிதிசார் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமான விபரங்கள்)

ரூபா

| வருமான வழிகள் | 2015 இல் ஏற்பாடு | 2015 இல் சேகரிப்பு | பற்றாக்குறை / மிகை |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்புக்கள் (விடுதி மற்றும் பதிவுக் கட்டணங்கள் முதலியன) | 7,550,000 | 6,945,607 | (604,393) |
| ஆ. பட்டப்பின் படிப்புக்கள் | - | - | - |
| இ. ஆலோசனை வழங்கல் (பயிற்சி, பரீட்சை மற்றும் ஏனையவை) | 6,450,000 | 1,134,312 | (5,315,688) |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **14,000,000** | **8,079,919** | **(5,920,081)** |

## 7.7 நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு – 2015

**ரூபா**

| விடயம் | சூத்திரம் | செலவீனம் |
|---|---|---|
| அ. மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் செலவீனம் (மீண்.செ) | மீண்.செ/மாணவர் எண்ணிக்கை | 272,748 |
| ஆ. மாணவர் ஒருவருக்கான மூலதன செலவீனம் (மூ.செ) | மூ.செ/மாணவர் எண்ணிக்கை | 89,810 |
| **மொத்தம்** | | **362,559** |

## 7.8 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் குறித்த விபரங்கள்

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவீனம் (ரூபா) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| அ. மூதவைக் கட்டடம் | 44,549,734.58 | 90% |
| ஆ. களஞ்சியக் கட்டடம் | 3,715,337.45 | 100% |
| இ. விளையாட்டு நிலையம் | 33,535,930.67 | 50% |
| ஈ. கழிவகற்றல் வடிகாலமைப்புத் தொகுதி | 14,858,111.00 | 100% |
| உ. விளையாட்டு மைதானப் பார்வையாளர் அரங்கு | 6,579,032.00 | 60% |
| **மொத்தம்** | **103,238,146.00** | |

## 7.9 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலமைக் கூற்று

| | குறிப்பு | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவையும் | 01 | 36,258,132 | 8,526,006 |
| முதலீடுகள் | 02 | 18,152,475 | 12,554,808 |
| கிடைக்கப் பெறக்கூடியவை | 03 | 14,645,875 | 10,464,501 |
| சொத்துப் பதிவேடுகள் | 04 | 7,368,400 | 3,162,310 |
| முற்பணங்கள் | 05 | 268,131 | 113,744 |
| | | **76,693,012** | **34,821,369** |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| கிடைக்கப் பெறக்கூடியவை | 06 | 5,892,384 | 6,417,887 |
| சொத்து, இயந்திர சாதன மற்றும் உபகரணம் | 07 | 1,421,626,674 | 1,508,243,648 |
| வளர்ச்சிகண்டுவரும் பணி | 08 | 290,865,005 | 167,994,886 |
| காணி சுவீகரிப்பு | 09 | 58,416,399 | 58,366,399 |
| தர முன்னேற்றக் கருத்திட்டங்கள் | 10 | 4,610,855 | 2,476,396 |
| | | **1,781,411,317** | **1,743,499,217** |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,858,104,329** | **1,778,320,586** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு செலவுகள் | 11 | 22,244,523 | 16,613,210 |
| நானாவித கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனையோர் | 12 | 85,484,192 | 87,920,015 |
| | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 13 | 196,300,647 | 159,021,600 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 14 | 9,396,706 | 7,722,914 |
| | | **205,697,353** | **166,744,514** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **313,426,067** | **271,277,739** |
| | | | |
| **நிகர சொத்துக்கள்** | | **1,544,678,262** | **1,507,042,847** |
| | | | |
| **நிகர சொத்துக்கள் /சம உரிமையாண்மை** | | | |
| ஒட்டுமொத்த நிதி (மூலதனம்) | 15 | 2,063,580,969 | 1,940,711,050 |
| பொது ஒதுக்கம் | 16 | (548,520,929) | (452,282,559) |
| விசேட ஒதுக்கம் | 17 | 1,990,995 | 1,897,846 |
| விசேட மூலதனங்கள் (நிதிகள்) | 18 | 27,627,227 | 16,716,509 |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ சம உரிமையாண்மை** | | **1,544,678,262** | **1,507,042,847** |

## 7.10 2015 டிசெம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று

| | குறிப்பு | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவரும் மூலதனம் | 19 | 343,371,000 | 326,702,000 |
| உதவிக் கொடுப்பனவும் மஹாபொல மாணியங்களும் | 20 | 30,256,550 | 15,368,900 |
| சுய நிதி நிகழ்வுத்திட்ட வருமானம் | 21 | 1,134,312 | 343,400 |
| ஏனைய வருமானம் | 22 | 12,503,307 | 11,809,374 |
| நிலைமாறக்கூடிய மூலதன மாணியங்கள் | 23 | 49,166,033 | 43,767,073 |
| **மொத்த வருமானம்** | | **436,431,202** | **397,990,747** |
| **செலவுகள்** | | | |
| ஆளணி வேதனாதிகள் | 24 | 213,723,414 | 159,510,038 |
| பிரயாணச் செலவுகள் | 25 | 1,004,694 | 1,484,599 |
| வழங்கல்கள் | 26 | 10,315,367 | 9,223,701 |
| பராமரிப்பு | 27 | 3,659,271 | 2,962,331 |
| ஒப்பந்தசார் செலவீனம் | 28 | 108,599,062 | 119,325,799 |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 29 | 27,172,161 | 18,602,962 |
| சுயநிதி நிகழ்வுத்திட்ட செலவுகள் | 30 | 600,410 | - |
| மாணவர் உதவித்தொகை மற்றும் மஹாபொல கொடுப்பனவுகள் | 31 | 30,256,550 | 15,368,900 |
| பெறுமானத்தேய்வு | 32 | 138,765,610 | 131,324,532 |
| **மொத்தச் செலவுகள்** | | **534,096,538** | **457,802,863** |
| **காலப்பகுதிக்கான மிகை/பற்றாக்குறை** | | (97,665,336) | (59,812,116) |

## 7.11 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| இயங்குநிலைச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| சாதாரண செயற்பாடுகளில் இருந்தான பற்றாக்குறை /மிகை | (97,665,336) | (59,812,116) |
| காசு நகர்வுகள் சேராதவை | | |
| நிலைமாற்றமுற்ற மூலதன மானியங்கள் | (49,166,033) | (43,767,073) |
| தேய்மானம் | 138,765,610 | 131,324,532 |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 1,673,792 | 2,923,544 |
| W/C யிலான மாற்றங்களுக்கு முன்னரான இயங்கு நிலை இலாபம் | **(6,391,968)** | **30,668,887** |
| முதலீடு (அதிகரிப்பு/குறைவு) | (5,597,667) | (9,921,070) |
| கிடைக்கப்பெற வேண்டியவையிலான (அதிகரிப்பு/குறைவு) (CA) | (4,201,373) | 1,436,459 |
| கிடைக்கப்பெற வேண்டியவையிலான (NCA)- (அதிகரிப்பு/குறைவு) | 545,504 | ( 815,407) |
| சொத்துப் பதிவேடுகளிலான (அதிகரிப்பு/குறைவு) | (4,206,090) | 2,269,143 |
| முற்பணத்திலான (அதிகரிப்பு/குறைவு) | (154,387) | 84,518 |
| அட்டுறு செலவவுகளிலான (அதிகரிப்பு/குறைவு) | 5,631,313 | (22, 352,323) |
| நானாவித கடன் வழங்குநர்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு/குறைவு) | (2,435,824) | (23,301,835) |
| **இயங்குநிலை செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப்பாய்ச்சல்கள்** | **(16,810,492)** | **(21,931,628)** |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள் | | |
| நிலையான சொத்துக்கள் கையகப்படுத்துகை (குறிப்பு 038) | (175,683,099) | (158,236,832) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்** | **(175,683,099)** | **(158,236,832)** |
| நிதியீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| ஒட்டுமொத்த நிதி | 122,869,919 | 109,668,633 |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 86,445,081 | 66,331,367 |
| ஏனைய நிதிகள் | 10,910,718 | 8,359,260 |
| **நிதியீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்** | **220,225,718** | **187,359,260** |
| | **27,732,126** | **7,190,799** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான நிகர அதிகரிப்பு/ குறைவு குறித்த காலப்பகுதி தொடக்கத்திலான காசும் காசுக்குச் சமமானவைகளும்** | **8,526,006** | **1,335,207** |
| **காலப்பகுதி முடிவிலான காசும் காசுக்குச் சமமானவையும்** | **36,258,132** | **8,526,006** |

**குறிப்பு - 31.12.2015 அன்று உள்ளவாறான வங்கிக் கணக்கு மீதிகள்**

| **வங்கி** | **கணக்கு இலக்கம்** | **தொகை (ரூபா)** |
|---|---|---|
| இலங்கை வங்கி | 3114828 | 30,695,456 |
| இலங்கை வங்கி | 3114820 | 2,421, ,375 |
| இலங்கை வங்கி | 78166821 | 202,235 |
| மக்கள் வங்கி | 10100168384805 | 2,177,086 |
| **மொத்தம்** | | **36,258,132** |

## 7.12 கணக்காய்வாளர் தலமை அதிபதியிள் அறிக்கை

யூவீபீ/பீடீ/டீ/யூடப்ளியூ/1/15/09

உபவேந்தர்
இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிா்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயா் கணக்காய்வு நிறுவனங்களின் சா்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால்

பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 114,130,385 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவந்தன. அதன் பிரகாரமான மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரசாயன பொருள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் கொள்வனவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் உரிய ஆண்டின் செலவினமாக பதிவழிக்கப்பட்டமையால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,231,211 பெறுமதியான இறுதி இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது காணி கையேற்கும் நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 539,200 ஆன சட்டச் செலவினம் மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த இருப்பு மீதிகளுக்கிடையே ரூபா 677,355 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடன்படிக்கை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 719,287 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு நபர்களிடமிருந்து கிடைத்த நிதி மானியங்களின் பெறுமதி ரூபா ரூபா 1,436,341 என பல்கலைக்கழகத்தினால்

உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,131,952 ஆக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ரூபா 3,531,671 கூட்டுப்பெறுமதியான பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| | மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 2,009,692 | தனிப்பட்ட மீதிப் பட்டியல் |
| | மீளச்செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் | 879,553 | |
| | பொது வைப்புக்கள் - மீண்டெழும் | 642,426 | வைப்புப் பதிவேடுகள் மற்றும் மீதி பட்டியல்கள் |
| | மொத்தம் | ---------------<br>3,531,671<br>======= | |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூலை 28 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு உப வேந்தராக வருகை தந்த பேராசிரியரொருவருக்கு 2011 சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்காக மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 93,546 தொகையான ஆராய்ச்சிப் படிகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் விபரத்தில் உள்ளடக்கப்பட்ட 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 38,000 ஆன வங்கித் தவறான வரவு வைத்தல்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிணைமுறி மற்றும் உடன்படிக்கை மீறியமை தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 8,440,058 தொகையொன்றை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பல்கலைக்கழகத்தால் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) செலுத்த வேண்டிய ரூபா

60,768,008 ஐ 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 37(1) ஆம் பிரிவு | வழிகாட்டல் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தெரிவுக் குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் ஆளுகை சபையினால் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சரவை அங்கீகாரமொன்றில்லாமல் 2014 நவம்பர் 12 ஆந் திகதி முதல் உபவேந்தரால் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரை பதிவாளராக நியமித்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,645,000 சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 139 | சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பொறியியல் நடவடிக்கைகளுக்கான மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,814,378 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 156 | மீளாய்வாண்டின் சனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்புத்தொகையை குறித்த நேரத்தில் செலுத்தாமையால் ரூபா 70,347 ஆன |

| | | |
|---|---|---|
| | | மிகைக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகையை அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 371(2) | 04 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொண்ட ரூபா 234,912 ஆன முற்பணங்களை அச்செயற்பாடு முடிவடைந்ததும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அதற்காக 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 2,139,950,371 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக முறைப்படி சொத்துக்களின் வகுப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்படாததுடன் ரூபா 32,850,376 கிரயத்திலான கணனி, மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாட்டு துறையை மேவுகை செய்யும் வகையில் செயற்பாட்டு கைநூலொன்று தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (ஊ) | 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 12/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் தாபன சுற்றறிக்கை | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குரிய, தனியாள் வீடுகளில் குடியிருப்போரிடமிருந்து வீட்டு வாடகையை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

--------------------------

### 3.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 97,665,336 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 59,812,116 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 37,853,220 தொகையான நலிவு தென்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டெழும் செலவினத்திற்காக அரசிடமிருந்து கிடைத்த மானியம் ரூபா 16,669,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் ரூபா 54,213,376 ஆல் அதிகரித்தமை மேற்குறித்த நலிவுக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டில் பங்களிப்பு அதிகரித்திருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம்

ஆண்டில் பங்களிப்பு குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 113,423,662 ஆகவிருந்த பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 254,823,688 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது அரசின் மானியம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் தவிர, வருமானம் 12 சதவீதத்தினாலும், பெறுமானத்தேய்வு தவிர, செலவினம் மற்றும் பற்றாக்குறை 17 சதவீத்தினாலும் அரசின் மானியம் 5 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் 120 சதவீத்தினால் அதிகரித்திருந்ததுடன், தொழிற்படு மூலதனம் 55 சதவீத்தினால் குறைவடைந்திருந்து.

(இ) முன்னைய ஆண்டின் போது நடைமுறைப் பொறுப்புக்களுக்கு நடைமுறைச் சொத்துக்கள் 3:1 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக நடைமுறைப் பொறுப்புக்களுக்கு நடைமுறைச் சொத்துக்கள் 1.4:1 ஆகி நடைமுறை விகிதத்தில் 1.6 வளர்ச்சியைக் காட்டிய போதிலும், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டமான நடைமுறைப் பொறுப்புக்களுக்கு நடைமுறைச் சொத்துக்கள் 1:2 என்ற நிலையை அடைந்திருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல் 23 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல் முறையே 11 சதவீதம்

மற்றும் 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. ஆண்டின் இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமமானவற்றில் 325 சதவீத அதிகரிப்பொன்று தென்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பல்கலைக்கழகத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 14 தந்திரோபாய இலக்குகள் குறிப்பிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான தந்திரோபாய இலக்குகளை 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையை அடைந்துகொள்ள முடியாமல் இருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலகக் கோரிக்கைக்கு ஏற்றவாறு தகைமைகள் மற்றும் சமூக பெறுமதிகளை மேம்படுத்துதல் மற்றும் மாற்றமடையும் கைத்தொழில் தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் அனைத்து பட்டப்படிப்பு பாடநெறிகளிலும் பாட விதானத்தைத் திருத்தம் செய்வது போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் பட்டதாரிகளின் சேவை ஈடுபாட்டு சதவீத்தை 80 சதவீதமான நிலைக்கு அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஆண்டில் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் சேவை ஈடுபாட்டு சதவீதம் 73 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் முகாமைத்துவ உயர் கல்விக்காக வெளிநாட்டு மாணவர்களின் பங்குபற்றல் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதினூடாக பல்கலைக்கழகத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு மாணவர் பதிவு, மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1 சதவீதமாக 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 0.54 சதவீதமாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உலகக் கோரிக்கைக்கு ஏற்றவாறு பட்டப்படிப்பு பாடநெறிகளில் போதனைகளை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கற்பிப்பதற்கு, கற்பதற்கு மற்றும் ஆராய்ச்சிகளுக்காக மிகவும் உயர்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் பல்கலைக்கழகத்தினை உலக தரப்படுத்தல் பட்டியலில் (ுநடி ழக ருைைநசளவைநைள சுயமெைபெ) முதல் 13000 இற்குள் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2016 மே 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அவ்விடம் 14236 இலிருந்து 15362 வரை 1126 இடங்களாலும் உள்நாட்டு தரப்படுத்தல் பட்டியலில் 2013, 2014

மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இடங்கள் முறையே 17, 19 மற்றும் 20 ஆவது இடம்வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஈ) அறிவு மற்றும் தகவல்கள் தேவைப்பாட்டிற்காக பல்கலைக்கழகத்தின் நூலக வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களின் பிரகாரம் மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் நூலகப் பாவனை எதிர்பார்த்த பெறுமதி 60 சதவீதமாக இருந்த போதிலும், அது 2015 ஆம் ஆண்டின் இறுதியின் போது 46.5 பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முறையே 1956 மற்றும் 1900 மாணவர்களுக்காக ரூபா 534,096,538 தொகை மற்றும் ரூபா 457,802,863 ஆன மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளப்பட்டமையால் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 273,055 மற்றும் ரூபா 240,949 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 32,106 ஆல் அதிகரித்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட 550 மாணவர்களில் 09 பேர் அதாவது 1.6 சதவீதம் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(எ) 2013 – 2017 கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 11 பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கு 850 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு வேண்டியிருந்த போதிலும், 550 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையில் 300 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது 05/0183/035/001 ஆம் இலக்க அமைச்சு பத்திரத்தின் கீழ் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதன் பொருட்டு கைத்தொழில் அமைச்சிற்குரிய காணியை உயர் கல்வி அமைச்சு கையேற்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 30.9667 ஹெக்டேயர் காணியின் உரித்தை பல்கலைக்கழகத்தால் சட்டரீதியாக கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினா தொடர்பாக தாமதமின்றி செயற்பட்டு முழுமையான பதிலை சமர்ப்பிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினதும் கணக்கீட்டு உத்தியோகத்தினதும் பொறுப்பாக இருந்த போதிலும், அரச கணக்காய்வினால் 2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 05 ஐயவினாக்களுக்கு 2016 மே 31 ஆந் திகதி அளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 6,650,000 ஆன பாதிடப்பட்ட மூலதன ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,480,495 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 5,169,505 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது மொத்த நிதி ஏற்பாட்டில் 78 சதவீதமாகும்.

(ஆ) உயர்தர புதிய தொழில்நுட்ப விடயப்பரப்பிற்கு இணங்கும் வகையில் தொழில்நுட்ப பட்டப்படிப்பு பாடநெறியொன்றை ஸ்தாபிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது பாதிடப்பட்ட மூலதன நிதி ஏற்பாட்டில் ரூபா 25,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 745,162 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததால் ரூபா 24,254,838 தொகையான ஏற்பாடு அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 97 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் திவிநெகும சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பதுளை மாவட்ட செயலகத்தின் ஊடாக 2014 திசெம்பர் மாதத்தில் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,323,026 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டமையால் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதில் திருப்திகரமான செயன் முன்னேற்றமொன்று காணப்படவில்லை.

(ஈ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வெளிவாரி பாடநெறிகளால் உழைத்த வருமானத்திலிருந்து ரூபா 2,000,000 அளவிலான பணத்தொகை பாடநெறி ஆரம்பிக்கும் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தாமல் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்றதும் குறைபயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூன் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 05 தீக் காப்பு பெட்டகங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது பொறியியல் வேலைத்தளத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த வெவ்வேறு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடிய ரூபா

14,060,480 பெறுமதியான 3 –Axis CNC இயந்திரத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கண்காட்சி செயற்பாடுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் இவ்வியந்திரம் குறைப்பயன்பாட்டிற்குட்பட்டுக் காணப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 222,768 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**4.5 ஒப்பந்த செயற்பாடு**

தேசிய கொள்வனவு முகவராண்மையின் 08 ஆம் இலக்கம் மற்றும் 2006 சனவரி 25 ஆந் திகதிய வழிகாட்டிக் கோவையினதும் ஐஊவுயுனு ளுடீனு.ʼ.01 33.6 ஆம் பந்தியின் பிரகாரமும் நிர்மாணங்கள் வழங்கப்படதன் பின்னர் சேவைநாடுனர் நிறுவனம் மற்றும் ஒப்பந்தக்காரருக்கிடையே எழுத்துமூல உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தின் நிர்மாணங்கள் மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்திற்கு வழங்கும் (ஊநுஊடீ) போது உடன்படிக்கைளை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.6 மனித வள முகாமைத்துவம்**

பல்கலைக்கழகத்தின் பீடங்களில் அங்கீகரிக்கப்பட்ட 10 பேராசிரியர்களின் பதவிகளும் கால்நடை விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம், மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடம் என்பவற்றிற்காக 180 அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர் பதவியணியில் 40 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் முகாமைத்துவ பீடத்தில் 07 விரிவுரையாளர்கள் மிகையாக காணப்பட்டனர். மேலும் 2006 யூன் 06 ஆந் திகதிய 876 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியில் 70 வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி.ʼ.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று குறித்த கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதிப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிராமையால் வருடாந்த செயல் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடிய முறையில் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01.∴2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133(2) இன் பிரகாரம் வெவ்வேறு துறைகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

-------------------------------------

2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) மற்றும் 4.2.2 பந்திகளின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

மதிப்பிடப்பட்ட செலவினம், உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 4 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான விலகலும் 09 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 15 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விலகலும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 5.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

---------------------------------------------------------------------

2012 செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்கு குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, கழிவு நீர் மீள்சுழற்சி செயற்திட்டத்தினைப் புனரமைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமை, கணக்கீட்டு குறைபாடுகள் மற்றும் இணங்காத கணக்குகள் காணப்பட்டமை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்யாமை, நிலையான சொத்துப் பதிவேட்டினை முறையாக பராமரிக்காமை. |
| (இ) களஞ்சியக் கட்டுப்பாடு | பலவீனமான இருப்பு முகாமைத்துவம், இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமை. |
| (ஈ) பதவியணியினர் நிர்வாகம் | பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை மற்றும் மிகை ஊழியர்கள் காணப்பட்டமை. |
| (உ) செயலாற்றல் | எதிர்பார்த்த இலக்கை அடையாமை |
| (ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கிடையே கருத்திற்கொள்ளக் கூடியளவு விலகல் காணப்படல். |

## 7.13 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

| கடந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பதில் | தற்போதைய நிலமை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 114,130,385 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவந்தன. அதன் பிரகாரமான மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நான் ஏற்றுக்கொள்கின்றேன். இந்த அவதானத்தில் குறிப்பிட்டபடி நிலையான சொத்துக்களை மீளக் கணிப்பு செய்வதற்கு நான் நடவடிக்கை எடுப்பதுடன் அவற்றை மீளவும் கணக்குக்குள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பல்கலைக்கழகத்தின் நடைமுறையற்ற (நிலையான) சொத்துக்கள் அனைத்துக்குமான குறியிடல் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அச் செயற்பாடு நிறைவு பெற்றதும் நாம் உடனடியாக புத்தகத்தில் பூச்சிய மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து அவற்றின் அப் பெறுமதியை மீளவும் கணக்குக்குள் உள்ளெடுப்போம். |

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | இரசாயன பொருள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் கொள்வனவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் உரிய ஆண்டின் செலவினமாக பதிவழிக்கப்பட்டமையால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா | அவதானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 3,312,569.00 ஆனது 2015ம் ஆண்டு கண்ணாடி உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் கொள்வனவு செய்ததுடன் தொடர்புடைய செலவீனம் ஆகும். பயன்படுத்தப்பட்ட கண்ணாடி உபகரணங்களுக்கான | கணக்காண்டு 2016 இலிருந்து குறித்த ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனங்களையும் கண்ணாடி உபகரணங்களையும் இருப்பழிப்பு செய்யும் கணக்கியல் நடைமுறை மாற்றப்பட்டு மீதமாகவுள்ள இருப்பை நடைமுறைச் சொத்தாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 12,231,211 பெறுமதியான இறுதி இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி செலவீனமாகக் காட்டப்பட்டது சரியானதே ஆகும். எப்படியிருப்பினும் பயன்படுத்தப்படாத இரசாயனங்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்களின் பெறுமதியை செலவீனமாக கருதுவது தவறானது ஆகும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். இந்த விடயத்தில் என்ன நடந்தது எனில், சில ஆண்டுகளாக இருப்புக்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் வழமைகளின் பிரகாரம் களஞ்சியத்திலிருந்து ஆய்வுசாலைக்கு வழங்கப்பட்ட பின்னர் அவற்றை செலவீனமாக அவர்கள் அடையாளம் கண்டுள்ளார்கள். வழங்கப்பட்டு பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ள இரசாயனங்களினதும் கண்ணாடி உபகரணங்களினதும் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து அவற்றை சொத்துக்களின் இருப்பு கணக்குக்குகளின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகயை நான் எடுப்பேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது காணி கையேற்கும் நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 539,200 ஆன சட்டச் செலவினம் மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபையுடன் தொடர்புடைய மேன்முறையீடு ஒன்றுக்காக சட்ட சேவைகளை பெற்றுக்கொண்டமைக்கான செலவீனமான ரூபா 76,250.00 உம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 615,450.00 பெறுமதியான சட்டச் செலவீனத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2015ம் நிதியாண்டின் போது காணி சுவீகரிப்புத் தொடர்பில் ஏற்பட்ட ரூபா 539,200.00 செலவீனமானது மீண்டுவரும் செலவீனமாக கணக்கீடு செய்யப்பட்டு பேரேட்டு பதிவின் மூலமாக சீர்செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | மீதி ரூபா 539,200.00 பல்கலைக்கழகத்துக்கு சொந்தமாக காணியின் சட்ட உறுதியை தெளிவு செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட செலவீனம் ஆகும். கீழ் வரும் பேரேட்டு கணக்குகளில் பதிவதன் மூலமாக இப் பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்<br>1. காணி சுவீகரிப்புக் கணக்கு- வரவு<br>2. பொது ஒதுக்கீடு - செலவு | |

**2.2.3 விவரிக்கப்படாத வித்தியாசங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த இருப்பு மீதிகளுக்கிடையே ரூபா 677,355 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.. | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிதிநிலமை தொடர்பான கூற்றுக்களிலுள்ள இருப்பு மீதி என்பவற்றுக்கிடையிலான ரூபா 677,335 பெறுமதியான வேறுபாட்டை சரிசெய்யும் நடவடிக்கைகளை நான் எடுப்பேன். பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்ட இருப்பு மீதியின் துல்லியத் தன்மையை அறிந்துக் கொள்ள திட்டமிட்டுள்ளேன். | இது தொடர்பிலான நிச்சயத்தன்மையை அறிந்து கொள்ளும் நோக்கத்திற்காக பல்கலைக்கழக உள்ளக கணக்காய்வு அதிகாரியினால் மீளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொடர்ந்தும் சரிசெய்யப்படாத மீதி காணப்பட்டது. இருப்புக்களை கண்காணிப்பதற்காக மென்பொருள் ஒன்று 2016ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் குறித்த பலவீனங்கள் தடுக்கப்படும் அல்லது குறைக்கப்படும் |
| (ஆ) | உடன்படிக்கை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகள் | இந்த ரூபா 719,287 வித்தியாசமானது ஒப்பந்தங்களை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந் | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வித்தியாசமானதும் தவறவிடப்பட்டதுமான ரூபா 719,287 மற்றைய வருமதிகள் எனும் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 719,287 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | து மீளவசூலிக்கப்பட வேண்டிய ஒட்டு மொத்தத் தொகைக்கும் ஒப்பந்தங்களை மீறியமைக்காக வசூலிக்கப்பட வேண்டிய தொகைக்கும் இடையிலானதாகும். நிதிக்கூற்றுகள் ஒப்பந்தத்தை மீறியமை தொடர்பில் வசூலிக்கப்பட வேண்டிய தொகையையே குறிக்கின்றன. எவ்வாறாயினும் நான் குறித்த வித்தியாசங்களை ஒப்புக் கொள்கின்றேன் அதாவது அவர்களிடமிருந்தான மற்றைய வருமதிகளும் கணக்கிடப்பட வேண்டும். எனவே இந்த அவதானிப்பை நான் ஏற்றுக் கொள்வதுடன் இரண்டையும் வேறுபடுத்தி கணக்கு வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். | தலைப்பில் கணக்கு வைப்புப் புத்தகத்தில் பதிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (இ) | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு நபர்களிடமிருந்து கிடைத்த நிதி மானியங்களின் பெறுமதி ரூபா 1,436,341 என பல்கலைக்கழகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,131,952 ஆக வெளிப்படுத்தப்பட்டு இருந்தது | இது 2013 ம் ஆண்டு தொடக்கம் இருக்கும் ஒரு கணக்கியல் ரீதியிலான தவறு ஆகும். உண்மையாக 31.12.2013 இல் உள்ளவாறான பல்வேறு மூலங்களிலிருந்துமான வருமதி வைப்புக்கள் மற்றும் கொடுப்பனவுகள் எனும் தலைப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் இந்த மீதியானது 2014ம் ஆண்டுக்கான திறந்த மீதிகளை பேரேடுகளில் பதிவுசெய்யும் போது ஆய்வு வருமதிகள் கணக்கு திறந்த மீதியாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தவறானது 2016ம் ஆண்டுக்கான கணக்கறிக்கையில் சீர்செய்யப்பட்டுள்ளது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>எவ்வாறாயினும் குறித்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சகல பரிமாற்றங்களும் துல்லியமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும் 31.12.2014 இல் உள்ளவாறான ஆய்வு வருமதிகள் இறுதி மீதியானது தவறாக பதியப்பட்டுள்ளமையே அதற்கான காரணமாகும். இந்த மீதியானது 2015ம் ஆண்டுக்கான திறந்த மீதியாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 2015ம் ஆண்டுக்கான பரிமாற்றங்கள் துல்லியமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.</td>
<td></td>
</tr>
<tr>
<td colspan="4">2.2.4 கணக்காய்வுக்கான போதியளவு ஆதாரங்கள் இன்மை</td>
</tr>
<tr>
<td></td>
<td>நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ரூபா 3,531,671 கூட்டுப் பெறுமதியான பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.
<table>
<tr><th>கணக்கு விடயம்</th><th>பெறுமதி</th><th>சமர்ப்பிக்கப்படா</th></tr>
<tr><td></td><td>ரூபா</td><td></td></tr>
<tr><td>மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள்</td><td>2,009,692</td><td rowspan="2">தனிப்பட்ட மீதி</td></tr>
<tr><td>மீளச்செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள்</td><td>879,553</td></tr>
<tr><td>பொது வைப்புக்கள் - மீண்டெழும்</td><td>642,426</td><td>வைப்புப் பதிவேடுகள் மற்றும் மீதி பட்டியல்கள்</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>3,531,671</td><td></td></tr>
</table>
</td>
<td>நான் ஏற்றுக்கொள்கின்றேன். இவ் மீதிகள் பேரேட்டுக் கணக்கில் உள்ள ஒட்டுமொத்த மீதியாகும். அத்துடன் தனித்தனி மீதிகளை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். நேரப் பகுப்பாய்வு என்பது செய்யப்படவில்லை. நான் அதனை துல்லியமாக தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்."வைப்புப் பதிவேடுகள்" எனும் பதத்தினால் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது தொடர்பில் தெளிவின்மையாகவுள்ளது.</td>
<td>2015 ம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை அவதானிப்புக்களுக்கு வழங்கப்பட்ட பதிலில் ஏற்றுக்கொண்டதற்கு அமைய வைப்புக்களுக்கான தனித்தனி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நேர மற்றும் வயது பகுப்பாய்வுகளும் செய்யப்பட்டுள்ளன.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்** | | | |
| (அ) | 2011 யூலை 28 ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்கு உப வேந்தராக வருகை தந்த பேராசிரியர் ஒருவருக்கு 2011 ஜனவரி முதல் யூலை வரையான காலப் பகுதிக்காக மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 93,546 தொகையான ஆராய்ச்சிப் படிகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திடம் இருந்து அறவிடப்பட்டு இருக்கவில்லை | நான் ஏற்றுக்கொள்கின்றேன். நேரத்துக்கு நேரம் நான்கு நினைவூட்டல் கடிதங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு இவ் ஆராய்ச்சிப் படி ரூபா 93,546 ரூபாவை மீளப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்படிட்டிருந்தது. இருந்தும் எவ்விதமான பதிலும் குறித்த பல்கலைக்கழகத்திலிருந்து கிடைக்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகம் இதனை சீர் செய்யும் என்பதால் புத்தகம் எந்தவிதமான மீதியையும் காட்டவில்லை. | பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல நான்கு நினைவூட்டல் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு இம் மீதி பெறப்பட வேண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் விபரத்தில் உள்ளடக்கப்பட்ட 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 38,000 ஆன வங்கித் தவறான வரவு வைத்தல்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | இவ் அவதானிப்புடன் நான் உடன்படுகின்றேன். மொத்தப் பெறுமதி ரூபா 63,256 இல் ரூபா 38,000.00 என்பது வங்கியினால் செய்யப்பட்ட தவறு இது கடிதம் மூலம் வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இன்று வரை சீர் செய்யப்படவில்லை. குறித்த வங்கியுடன் தொடர்பு கொண்டு அதனைச் சீர்செய்வதற்கான | மொத்த தவறான பெறுமதியான ரூபா 38,000 ஐ சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கையை நான் எடுப்பேன். வித்தியாசமாகவுள்ள மீதி ரூபா 25,256 ஆனது 2016ம் ஆண்டு காலத்தில் சீர்செய்யப்படும். | |
| (இ) | பிணைமுறி மற்றும் உடன்படிக்கை மீறியமை தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 8,440,058 தொகையொன்றை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பல்கலைக்கழகத்தால் அறவிடப்பட வேண்டியிருந்தது. | உடன்படிக்கையை மீறிய குறித்த பல்கலைக்கழக ஆசிரியர்களிடமிருந்து குறித்த தொகையை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | உடன்படிக்கையை மற்றும் பிணை மீறிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொடர்பிலான ரூபா 8,440,058 தொடர்பில் கீழ் வருமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>1. எம்.ஏ.ஆர்.என். பெரேரா - ரூபா 779,331.71 ஆனது மொத்த மீதி ரூபா 1,674,835.00 இலிருந்து மீள அறவிடப்பட்டுள்ளதுடன் மீதி ரூபா 895,503.79 அறவிடப்பட வேண்டியுள்ளது. அவரது பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியிலிருந்து மீதியை அறவிடுவதற்கான சம்மதம் பெறப்பட்டுள்ளது.<br>2. ஏ.கே.என்.டி பெர்ணான்டோ மீதியாகவுள்ள ரூபா 6,765,222.99 ஐ அறவிடுவது தொடர்பில் பல்கலைக்கழக சபையின் அனுமதியுடன் குறிப்பு நினைவூட்டல் செய்யப்பட்டுள்ளது. இருந்தும் எந்தவிதமான பிரதிபலிப்புக்களும் பெறப்படவில்லை. |
| (ஈ) | 2006ம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பல்கலைக்கழகத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) செலுத்த வேண்டிய ரூபா 60,768,008 ஐ 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் அவசியமான அனைத்து நடைமுறைகளையும் பூர்த்தி செய்துள்ள போதும் இறுதி கொடுப்பனவு பட்டியலிலுள்ள தொகை மதிப்பீட்டுக்குழுவின் அனுமதி கிடைக்காமையாலும் சில உப திட்டங்களை பூர்த்தி செய்வதிலும் கையளிப்பதிலும் உள்ள இயல்பான தாமதத்தின் காரணமாகவும் பிடித்து வைக்கப்பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகள் இயன்றளவு | 31.12.2015 நிலவரப்படி மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தப் பெறுமதியான ரூபா 60,768,008.00 இல் ரூபா 38,251,587.84 செலுத்தப்பட்டு உள்ளது. மீதியாக உள்ள ரூபா 22,516,420.16 ஐ செலுத்துவது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி கிடைக்காமையால் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | பூர்த்தி செய்யப்பட்டும் குறித்த மீதித் தொகையை செலுத்துவது தொடர்பில் நான் நடவடிக்கை எடுப்பேன். | |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்,மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

| கடந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | | | பல்கலைக்கழகத்தினால் மாதிரி அறிக்கையில் வழங்கப்பட்ட பதில் | தற்போதைய நிலமை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆண்டறிக்கையின் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை நான் முன்னேடுப்பேன். | ஆண்டறிக்கையின் வரைபு கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 37(1) ஆம் பிரிவு | வழிகாட்டல் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தெரிவுக் குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் ஆளுகை சபையினால் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சரவை அங்கீகாரம் ஒன்றில்லாமல் 2014 நவம்பர் 12 ஆந் திகதி முதல் | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பதவி 12.03.2014 தொடக்கம் வெற்றிடமாக உள்ளதுடன் இரண்டு சிரேஷ்ட உதவிப் பதிவாளர்களுக்கு கடமை நிறைவேற்றுவதற்கான பணி வழங்கப்பட்டு இருந்தது. இருந்தும் அது வெற்றிகரமானதாக அமையவில்லை. அதனால் திரு.ஏ.ஜீ. கருணாரத்தின 19.11.2014 நடைபெற்ற | 11.05.2014 பத்திரிகை விளம்பரம் மூலம் வெற்றிடமாகவுள்ள பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்த ஒரு அபேட்சகர் நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டார். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மற்றும் பேரவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உபவேந்தரால் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவரை பதிவாளராக நியமித்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,645,000 சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பேரவைக் கூட்டத்தின் முடிவின் பிரகாரம் பணிப்பொறுப்பு அடிப்படையில் மூன்று மாத காலத்துக்கு பதிவாளராக நியமிக்கப்பட்டார். அவர் இறுதியாக கடமையாற்றிய ரஜரட்டை பல்கலைக்கழக பதிவாளர் அனுப்பி வைத்திருந்த சம்பள பட்டியலின் பிரகாரம் சம்பள நிலை மற்றும் படிகள் கருத்தில் எடுக்கப்பட்டு அவருக்கான படிகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக அவர் பல்கலைக்கழகத்தினால் ஒதுக்கப்பட்ட வாகனத்தை பயன்படுத்தாமையாலும் அல்லது எரிபொருள் கொடுப்பனவையோ பெறாமையாலும் பல்கலைக்கழகத்துக்கு நிதிசார் நன்மை ஒன்றும் சேர்க்கப்பட்டது. | உறுப்பினர்கள அடங்கிய தேர்வுக் குழுவினால் குறித்த அபேட்சகர் பதிவாளருக்குரிய தேர்ச்சி மட்டத்தை கொண்டிராமையால் புதிய விண்ணப்பங்களை கோருமாறு சிபாரிசு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் மீண்டும் ஒரு தடவை 06.09.2015 பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் தகமைகளை பூர்த்தி செய்த இரண்டு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எவ்வாறாயினும் அவர்கள் நேர்முகத்தேர்வுக்கு வரவில்லை என்பது அடையாளப்படுத்தப்பட்டது. மீண்டும் பேரவையின் அனுமதியுடன் 04.12.2016 விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் எந்த விண்ணப்பங்களும் பெறப்படவில்லை. இந்த நடவடிக்கைகளின் நிலமை அவ் விடயத்தை தங்கள் கவனத்தில் எடுத்திருந்த மற்றும் பல்கலைக்கழக சேவையில் 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வருடங்களை பூர்த்தி செய்திருந்த ஒருவரை திறைசேரியின் சுற்றுநிருப வழிகாட்டல்களின் அடிப்படையில் நிரந்த பதிவாளர் நியமிக்கப்படும் வரை பணிப்பொறுப்பு அடிப்படையில் நியமனம் செய்வது எனத் தீர்மானித்து பேரவைக்கு அறிக்கையிடப்பட்டது |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 139 | சான்றுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் சான்றுதிப்படுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பொறியியல் நடவடிக்கைகளுக்கான மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,814,378 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நான் ஏற்றுக்கொள்கின்றேன். இது ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு அத்துடன் ஓரே தடவையில் பல கொடுப்பனவுகள் சான்றுப் படுத்தப்பட்டமையால் இது தவறவிடப்பட்டு இருந்தது. நான் உத்தியோகத்தர்களை இவ்வாறான தவறுகள் மீளவும் இடம்பெறாத வண்ணம் நெறிப்படுத்துவேன். | இவ்வாறான தவறுகள் தொடர்ந்து நடைபெறாமையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| | (ii) நிதிப்பிரமாணம் 156 | மீளாய்வாண்டின் ஜனவரி முதல் மே வரையான காலப் பகுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்புத் தொகையை குறித்த நேரத்தில் செலுத்தாமையால் | II நிதிப்பிரமாணம் 156 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் தொடர்புடைய பொருத்தமான அனுப்பும் படிவம் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமையால் மிகைக் கொடுப்பனவுகளாக ரூபா 2,024.00 மற்றும் ரூபா 9,675.00 செலுத்த வேண்டியேற்பட்டது. | II நிதியத்தின் தாமதமும் பகுதியளவில் காரணமாகவுள்ளமையால் குறித்த மிகைக் கொடுப்பனவுகள் ரூபா 2,024.00 மற்றும் ரூபா 9,675.00 ஐ மீளச் செலுத்துமாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 70,347 ஆன மிகைக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டு இருந்ததுடன், அத்தொகையை அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இருந்த போதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு பல தடவைகள் குறித்த படிவம் கிடைக்கப் பெறாமை தொடர்பில் அறிவிக்கப்பட்டது. முதல் மாதத்தின் படிவத்தை புகைப்படப் பிரதி எடுத்தே தாமதிக்கப்பட்ட படிவம் அனுப்பி வைக்கப்பட்டது. இக் கொடுப்பனவுகளை அந்த நேரம் தயாரித்திருந்த பயிலுனர்களின் கவனக் குறைவினாலும் குறித்த திகதியில் காசோலையை நிதியத்துக்கு அனுப்பாமல் புறக்கணித்தமையாலும் மிகைக் கொடுப்பனவாக ரூபா 7,203.00 ரூபா 42,146 மற்றும் ரூபா 9,299.00 செலுத்த வேண்டியேற்பட்டது. இந்தக் காலப்பகுதியில் இப்பிரிவானது எந்த நிரந்தர பணியாளர்களையும் கொண்டிருக்காததுடன் அனைத்து இலக்குகளும் பயிலுனர்கள் மூலமாகவே அடையப்பட்டன. மேற்குறித்த மிகைக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான அனுமதி நிதிக் குழுவிடமும் பல்கலைக்கழக பேரவையிடமும் பெறப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட மிகைக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக எந்தவிதமான மிகைக் கொடுப்பனவும் செலுத்தப்படுவதை தவிர்க்கும் நோக்கிலேயே மேற்குறித்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன. ஆண்டின் ஆரம்பத்திலேயே குறித்த படிவங்கள் பெறப்பட்டமையால் 2016ம் ஆண்டு 2017ம் ஆண்டு காலப்பகுதியில் எந்தவிதமாக மிகைக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டு இருக்கவில்லை பயிலுனர்களின் கவனக்குறைவால் செலுத்தப்பட்ட மிகைக் கொடுப்பனவு ரூபா 58,648.00 போன்ற விடயங்களை தடுப்பதற்கான முறைகள் தற்போது இயைபாக்கப்பட்டுள்ளன |
| | நிதிப்பிரமாணம் 371(2) | 04உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொண்ட ரூபா 234,912 ஆன முற்பணங்களை அச்செயற்பாடு | இம் முற்பணங்களில் சில வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஏற்கனவேயுள்ள வழங்கலில் உள்ள | சீர் செய்யப்படாமல் இருந்த சகல முற்பணங்களும் பெப்ரவரி 2016 அளவில் சீர் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முடிவடைந்ததும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அதற்காக 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | குறைகளின் காரணமாக இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. மற்றைய முற்பனவுக் கொடுப்பனவுகளில் சில குறித்த நடைமுறைப் பிரச்சனைகளின் காரணமாக சிக்கல் ஏற்பட்டது. எப்படியிருப்பினும் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இயன்றளவு முற்பணங்களை சீர் செய்யுமாறு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். | இவ்வாறான சீர்செய்யப்படாத முற்பணங்களின் மீதியை குறைப்பதற்காக நினைவூட்டல்களை அனுப்புவதன் மூலம் நாம் நடவடிக்கை எடுப்போம். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 2,139,950,371 கிரயமான ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக முறைப்படி சொத்துக்களின் வகுப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்படாததுடன் ரூபா 32,850,376 கிரயத்திலான கணனி, மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்க வில்லை. | நிர்வாகப் பிரிவானது நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணி வருகின்றது. இவ் அறிக்கையை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. கணணிகள் மற்றும் இதரபாகங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன. நான் உரிய உத்தியோகத்தர்களுக்கு கணணி மற்றும் இதர பாகங்களுக்கான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்றை பேணுவது தொடர்பில் அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். | “நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம்” கணணி மென்பொருள் ஒன்று 2016ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. “நிலையான சொத்துப் பதிவேடு” எனும் பெயர் கொண்ட தொகுதியொன்றை இவ் மென்பொருள் கொண்டுள்ளது. அத்துடன் கணணி வன்பொருள் மற்றும் மென்பொருள் பதிவேட்டையும் கொண்டுள்ளது. |
| (உ) | 2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது | பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாட்டு துறையை மேவுகை செய்யும் வகையில் | பிரதான செயற்பாட்டுத்துறையை மேவுகை செய்யும் செயற்பாட்டு கைநூலை | பல்கலைக்கழக தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | செயற்பாட்டு கைநூலொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | உருவாக்குவதற்கான அவசியமான ஏற்பாடுகளை நான் செய்வேன். | அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு கடமைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்தப் பட்டியல் ஒவ்வொரு அலுவலரும் மேற்கொள்ளவேண்டிய கடமைகளை தெளிவாக குறிப்பிடுகின்றது. இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு அலுவலரும் நிறுவனத் தலைவரினால் அல்லது பகுதியின் தலைவரினால் வழங்கப்படும் எந்த கடமைகளையும் சேவைத் தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளத்தக்க வகையில் பிணிக்கப்பட்டுள்ளார்கள். |
| (ஊ) | 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 12/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் தாபன சுற்றறிக்கை | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குரிய, தனியாள் வீடுகளில் குடியிருப்போரிடமிருந்து வீட்டு வாடகையை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தலைநகரில் இருந்து மிகவும் தூரத்தில் அமைந்திருப்பதுடன் சிரேஷ்ட கல்வி சார் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதிலும் தொடர்ந்து தக்கவைத்திருப்பதிலும் பெரும் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எப்படியிருப்பினும் வீட்டு வசதிகள் என்பது ஆட்சேர்ப்பிலும் தக்க வைப்பதிலும் விசேட வகைக்குரியதாகவுள்ளது. பல்கலைக்கழக பேரவை அடுத்த வருடத்திலிருந்து வாடகையை அறவிடுவதற்கான ஏற்பாடுகளை | பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் நிர்வாகப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட வீட்டுக்குழு மூலம் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு 01.12.2016 நடைபெற்ற பல்கலைக்கழக பேரவையின் 117 வது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விபரமான அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்துள்ளது. | |

3. **நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 97,665,336 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 59,812,116 ஆக இருந்தமையால் முன்னைய சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 97,665,336 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 59,812,116 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா | இந்த அவதானிப்பு சற்று தெளிவற்றதாகவுள்ளது. இங்கு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான பற்றாக்குறை என்பது ஒரு தடவை ரூபா 441,036,336.00 எனவும் மற்றும் ஒரு தடவை ரூபா 97,665,336.00 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் இவ் ஆண்டுக்கான பற்றாக் குறையானது ரூபா 97,665,336.00 ஆகவே இருந்தது. | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும். |

| | | |
|---|---|---|
| 37,853,220 தொகையான நலிவு தென்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டெழும் செலவினத்திற்காக அரசிடமிருந்து கிடைத்த மானியம் ரூபா 16,669,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் ரூபா 54,213,376 ஆல் அதிகரித்தமை மேற்குறித்த நலிவுக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன. | | |
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டில் பங்களிப்பு அதிகரித்திருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டில் பங்களிப்பு குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 113,423,662 ஆகவிருந்த பங்களிப்பு மீளாய்வாண்டின் | இவ் அவதானத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்பட்ட பெறுமதி அல்லது வேறுவிதமாக சொல்லவதானால் பங்களிப்பு ஒவ்வவொரு ஆண்டும் ஊழியர்களின் ஊதியத்தை மீள்திருத்தம் செய்ததன் மூலமாகவும் மொத்த மேலதிகத்தின் அல்லது பற்றாக்குறையின் பெறுமானத் தேய்வு மூலமாகவும் பெறப்பட்டதாகும். 2013 ம் ஆண்டின் பற்றாக்குறை உயர் பெறுமதியாக இருந்ததுடன் குறித்த ஆண்டுக்கான சேர்க்கப்பட்ட பெறுமதி ஒப்பீட்டளவில் குறைவாகவிருந்தது. கணிசமான தாக்கத்தை செலுத்தியுள்ள இவ் ரூபா | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| போது ரூபா 254,823,688 வரை அதிகரித்திருந்தது.. | | 142,844,513.00 இற்கான பிரதான காரணம் 2011ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு ஊழியர்களின் ஊதியம் மற்றும் பெறுமானத் தேய்வுகளில் ஏற்பட்ட ஒப்பிட்டுரீதியிலான அதிகரிப்பு நிகர பற்றாக்குறையில் ஏற்பட்ட அளவறிரீதியிலான அதிகரிப்பு என்பனவேயாகும். | |
| (அ) | 2014 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது அரசின் மானியம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் தவிர, வருமானம் 12 சதவீதத்தினாலும், பெறுமானத்தேய்வு தவிர, செலவினம் மற்றும் பற்றாக்குறை 17 சதவீத்தினாலும் அரசின் மானியம் 5 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. | I. வருமானங்கள் (அரசாங்க நன்கொடைகள் மற்றும் பிற்போடப்பட்ட வருமானங்கள் தவிர்ந்த) கணக்காய்வு அவதானத்தின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட செலவீனத் தலைப்பு 12 சதவீத அதிகரிப்பை நிதிகளின் பொதுவான அளவில் காண்பிக்கின்றது. இந்த வருடாந்த அதிகரிப்புக்கு பிரதான காரணம் சுயநிதிக் கற்கை நெறிகள் மூலமான வருமானம் 400 வீதமாகவும் வேற வகையிலான வருமானங்கள் 10 வீதமாகவும் அதிகரித்தமையேயாகும்.<br>II செலவீனம் (பெறுமானத் தேய்வு தவிர்ந்தது) கணக்காய்வு இத் தலைப்பின் கீழான வருடாந்த அதிகரிப்பு 17வீதம் என சுட்டிக்காட்டுகின்றது. அதற்கான பிரதான காரணம் ஊழியர்களின் ஊதியம் எனும் | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | | தலைப்பில் ஒப்பிட்டளவில் ஏற்பட்ட 34 வீத அதிகரிப்பும் “ஒப்பந்த செலவீனங்கள்” எனும் தலைப்பில் ஏற்பட்ட 9 வீத குறைவுமே ஆகும். என்றாலும் இதற்குள் வரும் வேறு செலவீனத் தலைப்புக்களில் அதிகரிப்பு இருந்த போதும் அது கணிசமானதல்ல.<br><br>III. அரசாங்க நன்கொடைகள் 2014 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 5 சதவீதம் அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பிரதான காரணம் 2015ம் ஆண்டுக்கான பாதீட்டில் ஏற்பட்ட அதிரிப்பு ஆகும். | |
| (ஆ) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் 120 சதவீத்தினால் அதிகரித்திருந்ததுடன், தொழிற்படு மூலதனம் 55 சதவீத்தினால் குறைவடைந்திருந்து. | நிதிநிலமைகளின் படி பகுப்பாய்வு ரீதியிலான நிதி மீளாய்வின் கீழ் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி 120 வீதமாக அதிகரித்திருப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவீனங்கள் நடைமுறைக் கணக்கு மீதிகள் முதலீடுகள் இருப்புக்கள் மற்றும் பெறத்தக்க கணக்குகள் என்பவற்றுக்கான அரசாங்க நன்கொடை அதிகரித்திருப்பதும் இதற்கு காரணம் என்பது கணக்காய்வு | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைககளின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | முன்னைய ஆண்டின் போது நடைமுறைப் பொறுப்புக்களுக்கு நடைமுறைச் சொத்துக்கள் 3:1 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக நடைமுறைப் பொறுப்புக்களுக்கு நடைமுறைச் சொத்துக்கள் 1.4:1 ஆகி நடைமுறை விகிதத்தில் 1.6 வளர்ச்சியைக் காட்டிய போதிலும், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டமான நடைமுறைப் பொறுப்புக்களுக்கு நடைமுறைச் சொத்துக்கள் 1:2 என்ற நிலையை அடைந்திருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டது போன்று தற்போதைய விகிதத்தில் ஏற்பட்ட அளவறிரீதியிலான பல்கலைக்கழகத்தின் குறுகிய கால நடைமுறைச் சொத்து அதிகரித்திருந்த போதும் நியமங்களின் எல்லையை அல்லது 1.1 இன் வெட்டுப்புள்ளியை அடையவில்லை. எப்படியாயினும் நடைமுறைச் சொத்துக்களின் நிலையான பெறுமதி அரசாங்க நன்கொடைகளின் மூலம் பராமரிக்கப்படும் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களில் துல்லியமாக துணிய முடியாது. | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும். |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல் 23 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல் முறையே 11 சதவீதம் மற்றும் 18 | இவ்வாண்டு காசு மற்றும் அதற்கு சமனானவற்றில் கணிசமான அதிகரிப்பை காட்டுவதற்கான பிரதான காரணம் முன்னைய ஆண்டும் வங்கிகளின் காசுமீதி 450 வீத வளர்ச்சியை காண்பித்தமையே ஆகும். | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும் |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. ஆண்டின் இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமமானவற்றில் 325 சதவீத அதிகரிப்பொன்று தென்பட்டது. | | |

**4 செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பல்கலைக்கழகத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 14 தந்திரோபாய இலக்குகள் குறிப்பிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான தந்திரோபாய இலக்குகளை 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையை அடைந்துகொள்ள முடியாமல் இருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | உலகக் கோரிக்கைக்கு ஏற்றவாறு தகைமைகள் மற்றும் சமூக பெறுமதிகளை மேம்படுத்துதல் மற்றும் மாற்றமடையும் கைத்தொழில் தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் அனைத்து பட்டப்படிப்பு பாடநெறிகளிலும் பாட விதானத்தைத் திருத்தம் செய்வது போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் பட்டதாரிகளின் சேவை ஈடுபாட்டு சதவீத்தை 80 சதவீதமான நிலைக்கு அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஆண்டில் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் சேவை ஈடுபாட்டு சதவீதம் 73 சதவீதம் வரை | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு பட்டதாரிகளின் வேலைவாய்புத்திறனை பட்டமளிப்பு வைபவத்துக்கு முன்னதாக பட்டமளிப்பு அங்கிகளை கையளிக்கும் போது அதாவது அவர்கள் கற்கையை முடித்து வெளியேறிய ஆறுமாதங்களின் பின்னர் அளவிட்டு வருகின்றது. இம் முறையினை மாற்றி கற்கையை பூர்த்தி செய்து ஆறு மாதங்களின் பின்னரும் பட்டமளிப்பு விழாவில் இருந்து ஒரு வருடத்துக்கு பின்னும் அளவீடுகளை மேற்கொள்வதன் மூலம் மிகவும் துல்லியமான வேலைவாய்ப்பு வீதம் பெறப்பட முடியும். ஏற்கனவே இது தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு பட்டமளிப்பு விழாவில் இருந்து ஆறுமாத காலத்துக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் அளவீட்டுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு அளவீடுகளை ஒரு வருட நிறைவு மற்றும் இரண்டு வருட நிறைவிலும் மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.<br><br>அளவீட்டு செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பிரதிபலிப்புக்களும் இந் நோக்கத்துக்காக பட்டதாரிகளுக்கு அனுப்பப்பட்ட வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | வீழ்ச்சியடைந்திருந்தது. | நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் முகாமைத்துவ உயர் கல்விக்காக வெளிநாட்டு மாணவர்களின் பங்குபற்றல் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதினூடாக பல்கலைக்கழகத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு மாணவர் பதிவு, மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1 சதவீதமாக 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 0.54 சதவீதமாக இருந்தது. | தற்போது கல்வியைப் பெறும் வெளிநாட்டு மாண வர்கள் ஜனாதிபதி புலமைப்பரிசில் மூலம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டவர்கள்.பல்க லைக்கழகத்தை மேலும் பிரபலமாக்குவதற்கான நடவடிக்கைகள் இணையத்தளம் மூலமாக கவர்ச்சிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. | நான்கு வெளிநாட்டு மாணவர்கள் தற்போது இப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்றார்கள். இவ்வாறான மாணவர்களின் அனுமதியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உலகக் கோரிக்கைக்கு ஏற்றவாறு பட்டப்படிப்பு பாடநெறிகளில் போதனைகளை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கற்பிப்பதற்கு, கற்பதற்கு மற்றும் ஆராய்ச்சிகளுக்காக மிகவும் உயர்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் பல்கலைக்கழகத்தினை உலக தரப்படுத்தல் | பல்கலைக்கழகத்தின் இணையவழி தரப்படுத்தல் வரிசையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. துணை வேந்தர் இதற்காக ஒரு விசேட குழுவை அமைத்துள்ளதுடன் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரை குழுத் தலைவராகவும் நியமித்துள்ளார். இந்தக் குழு பல்கலைக்கழகத்தின் இணைய வழி தரநிலையை உயர்த்துவதற்கான விசேட அளவீடுகளை ஏற்கனவே எடுத்துள்ளது. அதே நேரம் பட்டக்கற்கைகளின் தரத்தை உயர்த்துவதற்காக தரத்தை விரிவாக்கம் செய்தல் பட்டக்கற்கைகளை | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது 16.03.2017 இல் உள்ளவாறான இணையவழி தரப்படுத்தலில் 10,911 வது இடத்துக்கு தன்னை மேல் உயர்த்தியுள்ளதுடன் உள்நாட்டு தரப்படுத்தலில் 18வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியலில் (Web of Universities Ranking) முதல் 13000 இற்குள் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2016 மே 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அவ்விடம் 14236 இலிருந்து 15362 வரை 1126 இடங்களாலும் உள்நாட்டு தரப்படுத்தல் பட்டியலில் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இடங்கள் முறையே 17, 19 மற்றும் 20 ஆவது இடம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. | மீள்பரிசீலனை செய்தல் என்பவை செய்யப்பட்டு உள்ளதுடன் சேவை பெறுனர்களின் தேவையை நிறைவேற்றுவதற்கும் மாணவர்கள் மைய கற்பித்தல் கற்றல் முறைமைகள் தொடர்ச்சியாக பயன் படுத்தப்பட்டவண்ணமுள்ளன. கல்வி நடவடிக்கைககளுக்கு மேலதிகமாக தரத்தை உயர்த்துவதற்காக இணைப்பாட விதானச் செயற்பாடுகள் உள்வாங்கப்பட்டுள்ளன. விளையாட்டுச் செயற்பாடுகளையும் வசதிகளையும் அதிகரிப்பதற்கும் மருத்துவமனை வசதிகளை அதிகரிப்பதற்கும் இதர மனமகிழ்வுக்கான ஏற்பாடுகளுக்குமான நடவடிக்ககைகள் எடுக்கப்பட உள்ளன. பல்கலைக்கழகத்தின் 32 ஆய்வுகூடங்களுக்கும் தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயனங்களை கொள்வனவு செய்வதற்கான ஏதுக்களை பெறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. | |
| (ஈ) | அறிவு மற்றும் தகவல்கள் தேவைப்பாட்டிற்காக பல்கலைக்கழகத்தின் நூலக வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களின் பிரகாரம் மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் நூலகப் பாவனை எதிர்பார்த்த பெறுமதி 60 சதவீதமாக இருந்த | கணக்காய்வு அறிக்கையானது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் நூலகப் பாவனையானது 2015 ம் ஆண்டு 46.5 வீதமாக இருந்தது எனக் குறிப்பிடுகின்றது. இவ் இறுதி முடிவுக்கு வருவதற்கான தரவுகள் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் நூலக உசாத்துணை அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டதாகும்.இந்த அறிக்கையானது | 1. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலத்திரனியல் தகவல் திரட்டுக்கள் மூலமாக வாசகர்களின் தேவை பூர்த்தி செய்யப்படும்.<br>2. நூலகரின் விசாரணை சேவையின் கீழ் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை நூலக மின்னஞ்சல் வழங்கிவருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அது 2015 ஆம் ஆண்டின் இறுதியின் போது 46.5 பெறுமதியொன்றை எடுத்திருந்தது. | பல்கலைக்கழகத்தின் பௌதிக நிலை நூலகத்தில் உள்ள தகவல் மூலங்கள் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளால் பயன்படுத்தப்பட்டமையை வைத்து நூலகத்தின் முகாமை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு வசதி செய்வதற்காக தயாரிக்கப்பட்டதாகும். பௌதிக நூலகத்தில் உள்ள மிகக் குறைந்த நூலக தகவல்கள் தொடர்பான விபரங்களே உதாரணமாக புத்தகங்கள் ஆய்வுக் கட்டுரைகள் கடந்த கால வினாப் பத்திரங்களின் பாவனை போன்றவையே இவ் அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழக பணித்தொகுதியினரின் நூலகப்பயன்பாடு தொடர்பிலான தரவுகளை அவ் அறிக்கை கொண்டிருக்கவில்லை.மேலும் பல்கலைக்கழக கணணிகள் மற்றும் இணையம் வழியாக விஞ்ஞானச் சஞ்சிகைகள் பாவனை தொடர்பிலானவற்றையும் அது போன்று நூலகரின் விசாரணை சேவை மற்றும் பத்திரிகைகளின் பாவனை தொடர்பிலான விடயங்களையும் இவ் அறிக்கை கொண்டிருக்கவில்லை. எனவே நூலகப் பாவனையின் விரிவு தொடர்பான இறுதி முடிவுக்கு வருவதற்கு இவ் அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். அத்துடன் 2015ம் ஆண்டின் இறுதி காலாண்டுப் பகுதியில் | 3. வாசகர்களின் தேவையின் அடிப்படையில் சிங்கள தமிழ் ஆங்கில நாளிதழ்களும் வார இதழ்களும் வாங்கப்படுகின்றன.<br><br>4. வாசிப்பு அறையானது 24 மணி நேரமும் திறந்த நிலையில் பேணப்படுகின்றது.<br><br>5. மாணவ பாவனையாளர்களின் நூலக அட்டைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.<br><br>6. நூலகத்தில் அதிகம் பாவிக்கப்படும் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளின் மேலதிக பிரதிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | | நூலகத்தின் கூரை திருத்த வேலை காரணமாகவும் நூலகப் பாவனை தொடர்பில் சில பிரச்சனைகள் எழுந்திருந்தன. புதிய தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்துவதன் மூலமாக நூலக சேவையை மேலும் வினைத்திறனாக்கி நூலகப்பாவனையை எதிர்பார்க்கப்படும் மட்டத்தில் பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (உ) | மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முறையே 1956 மற்றும் 1900 மாணவர்களுக்காக ரூபா 534,096,538 தொகை மற்றும் ரூபா 457,802,863 ஆன மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளப்பட்டமையால் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 273,055 மற்றும் ரூபா 240,949 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 32,106 ஆல் அதிகரித்திருந்தது. | மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவீனம் ரூபா 32,106.00 ஆல் அதிகரித்தமைக்கான பிரதான காரணம் மீளாய்வு ஆண்டின் போது மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பைக் காட்டிலும் வரிகள் மற்றும் மூலதனச் செலவுகளில் ஏற்பட்ட அதிரிப்பு அதிகமாக இருந்ததே ஆகும். | மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவீனம் ரூபா 32,106.00 ஆல் அதிகரித்தமைக்கான பிரதான காரணம் மீளாய்வு ஆண்டின் போது மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பைக் காட்டிலும் வரிகள் மற்றும் மூலதனச் செலவுகளில் ஏற்பட்ட அதிரிப்பு அதிகமாக இருந்ததே ஆகும். (வழங்கப்பட்ட பதிலில் எந்த மாற்றமும் இல்லை) |
| (ஊ) | மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட 550 மாணவர்களில் 09 பேர் அதாவது 1.6 சதவீதம் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். | சில மாணவர்கள் வேலைவாய்ப்பு குடிபெயர்வு மற்றும் இதர பிரத்தியேக காரணங்களினால் தமது கற்கைநெறிகளை கைவிட்டுள்ளனர். | சில மாணவர்கள் வேலைவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை பெற்றுதுடன் கற்கைநெறிகளை கைவிட்டுள்ளனர்.இவ்வாறான இடைவிலகல் நடைமுறையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | தடுக்ககூடியதல்ல. |
| (எ) | 2013–2017 கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 11 பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கு 850 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு வேண்டியிருந்த போதிலும், 550 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையில் 300 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மாணவர்கள் உள்நுழைவுக்கான மாணவர் தெரிவை செய்வதனாலும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் சிலர் பதிவுகளை மேற்கொள்ளாமையாலும் வேறுபட்ட கற்கைநெறிகளுக்கு தொடர்ச்சியாகவே இற்றைப்படுத்தல் நடைபெறுவதனாலுமே இது நடைபெறுகின்றது. | பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவே மாணவர்கள் அனுமதியை செய்கின்றது. இயன்றளவுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எழுகின்ற காரணிகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளன. |
| **4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்** | | | |
| (அ) | 2008 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது 05/0183/035/001 ஆம் இலக்க அமைச்சு பத்திரத்தின் கீழ் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதன் பொருட்டு கைத்தொழில் அமைச்சிற்குரிய காணியை உயர் கல்வி அமைச்சு கையேற்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 30.9667 ஹெக்டேயர் காணியின் உரித்தை பல்கலைக்கழகத்தால் சட்டரீதியாக கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | கைத்தொழில் அமைச்சுக்கு சொந்தமான காணியில் இருந்து ஆறு பேர் நட்டஈடு வழங்கப்பட்டு அகற்றப்பட்ட பின்னரும் இரண்டு பேர் குறித்த காணியில் தொடர்ந்தும் இருந்தமையால் அது தொடர்பிலான வழக்கு உயர் நீதிமன்றில் நடைபெற்று வருவதனால் காணி சுவீகரிப்பு தாமதமாகியுள்ளது. | பதுளை பிரதேச செயலாளருடன் கலந்துரையாடும் பொருட்டும் பொருத்தமான நட்டஈட்டை கலந்து பேசுவதன் மூலமாக செலுத்தும் பொருட்டும் நட்ட ஈட்டுக் குழு ஒன்றை அமைக்குமாறு கோரி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினா தொடர்பாக தாமதமின்றி செயற்பட்டு முழுமையான பதிலை சமர்ப்பிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினதும் கணக்கீட்டு உத்தியோகத்தினதும் பொறுப்பாக இருந்த போதிலும், அரச கணக்காய்வினால் 2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 05 ஐய வினாக்களுக்கு 2016 மே 31 ஆந் திகதி அளவிலும் பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை. | தங்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வாளர் திணைக்கள அதிபதியினால் எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்கள் ஐந்தில் இரண்டுக்குரிய பதில்கள் 20.06.2016 மற்றும் 21.06.2016 ஆகிய தினங்களில் கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாத் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை என்பவற்றின் காரணமாக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதற்கான எனது வருத்தத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.<br>இதற்கு மேலதிகமாக மீதமாகவுள்ள மூன்று கணக்காய்வு ஐய வினாக்களுக்குமான பதில்களை விரைவில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன். | 2015ம் ஆண்டு ஆறு கணக்காய்வு ஐய வினாக்கள் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றன. அவற்றுள் நான்குக்குரிய பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்றைய இரண்டு ஐயவினாக்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பான பதில்கள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட இறுதி வரைபு அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன. |
| **4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு** | | | |
| (அ) | ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 6,650,000 ஆன பாதிடப்பட்ட மூலதன ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,480,495 தொகை | 2015ம் ஆண்டு ஆய்வுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் சில பயன்படுத்தப்படாத நிலமை இருந்தபோதும் 2015ம் ஆண்டு ஆய்வுக் குழு 32 ஆய்வு முன்மொழிவுகளுக்கு | இருந்தபோதும் 32 ஆய்வு முன்மொழிவுகள் 2015ம் ஆண்டுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 2016 ம் ஆண்டிலேயே அவற்றுக்கான செலவீனங்கள் நடைபெற்றுள்ளன. இதன் விளைவாக 2016ம் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 5,169,505 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது மொத்த நிதி ஏற்பாட்டில் 78 சதவீதமாகும். | அனுமதியை வழங்கியிருந்தது. 2015 ம் ஆண்டு ஆய்வுகளுக்காக அனுமதிக்கபட்ட நிதி ரூபா 31,474,596.06 ஆக இருந்தது. இதன் காரணமாக 2014 ம் ஆண்டில் இருந்ததைவிட 300 சதவீத அதிகரிப்பை இது பிரதிபலித்தது.<br>எவ்வாறாயினும் ஆய்வுகளுக்குத் தேவையான இரசாயனங்களையும் உபகரணங்களையும் உள்நாட்டில் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதங்களும் பல்கலைக்கழகத்தில் ஆய்வுகளுக்கு அவசியமான உபகரணங்களில் உள்ள பற்றாக்குறை காரணமாகவும் ஆய்வுகளுக்கான ஏற்பாட்டை பாவிக்க முடியாத நிலையிருந்தது.<br>அதே நேரம் சில ஆய்வுகள் வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டமையாலும் அதற்கான நிதி வசதிகள் குறித்த நிறுவனங்களால் வழங்கப்பட்டமையாலும் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் சில பாவிக்கப்படவில்லை.<br>எப்படியிருந்தாலும், பல்கலைக்கழகத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக இருக்கும் ஆய்வுப் பங்களிப்பு மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் இருந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். | ஆண்டுக்கான ஆய்வுக்களுக்கான செலவீனம் ரூபா 7,162,475.00 இது குறித்த ஆண்டின் பாதீட்டின் ஏற்பாடுகளைத் தாண்டிய செலவீனம் ஆகும். |
| (ஆ) | உயர்தர புதிய தொழில்நுட்ப விடயப்பரப்பிற்கு இணங்கும் வகையில் தொழில்நுட்ப பட்டப்படிப்பு பாடநெறி ஒன்றை | கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப கற்கைநெறிக்கான தொழில்நுட்ப பட்டத்தை | ரூபா 50 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொழில்நுட்ப கற்கைநெறிக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மீண்டெழும் |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்தாபிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது பாதிடப்பட்ட மூலதன நிதி ஏற்பாட்டில் ரூபா 25,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 745,162 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டு இருந்ததால் ரூபா 24,254,838 தொகையான ஏற்பாடு அதாவது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 97 சதவீதம் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தாபிக்கும் நோக்கில் 2015ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பாதீட்டு மூலதன ஏற்பாடான ரூபா 25,000,000.00 இல் ரூபா 745,162.00 மட்டுமே செலவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 24,254,238.00 பயன்படுத்தப்படாது மீதமாகவிருந்தது. இது 2015ம் ஆண்டு ஆய்வுசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் அதேபோன்று புதிய பட்டக்கற்கைளுக்கான கலைத்திட்டத்தை வடிவமைப்பதற்கும் ஓதுக்கப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் ஒதுக்கீட்டு ஏற்பாட்டில் 97 சதவீதமாகும். பாடத்திட்டங்களை வடிவமைப்பதற்கு அநேகமான வேலைப்பட்டறைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவீனம் ரூபா 745,162.00 ஆகும். ஆய்வுசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம் 2015ம் ஆண்டு ஆடி மாதம் கோரப்பட்டு கொள்வனவுச் செயற்பாடுகள் ஒரு மாதம் பின்பாக முன்னெடுக்கப்பட்டன. வழங்குனர் உபகரணங்களை வழங்குவதற்கு 03 மாத காலத்தை எடுத்தமை போன்றவற்றால் 2015ம் ஆண்டுக்கான ஏற்பாட்டை அதே ஆண்டிலேயே செலவழிப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை. | செலவீனம் செலவிடப்படுகின்றது. |
| (இ) | 2014 ஆம் ஆண்டில் திவிநெகும ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி | இழைய வளர்ப்பு ஆய்வுகூடத்துக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் கொள்வனவு | இழைய வளர்ப்பு அலகு ஒன்றை தாபிப்பதற்காக பதுளை மாவட்ட செயலகத்தின் மூலம் பொருளதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 3,323,020.00 |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் பதுளை மாவட்ட செயலகத்தின் ஊடாக 2014 திசெம்பர் மாதத்தில் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,323,026 தொகை 2015 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டமையால் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதில் திருப்திகரமான செயன் முன்னேற்றமொன்று காணப்படவில்லை | செய்வதற்காக ரூபா 1,907,312.69 தற்போது செலவழிக்கப்பட்டுள்ளது. அது மொத்த ஏற்பாட்டில் 57 சதவீதமாகும். | இல் ரூபா 2,587,948.00 28 பெப்ரவரி 2017 வரை செலவிடப்பட்டுள்ளது. குறித்த அலகு தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| (ஈ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வெளிவாரி பாடநெறிகளால் உழைத்த வருமானத்திலிருந்து ரூபா 2,000,000 அளவிலான பணத்தொகை பாடநெறி ஆரம்பிக்கும் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தாமல் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது | வங்கிக் கணக்கு 31.12.2015 இல் உள்ளவாறான வங்கி மீதி ரூபா 2 மில்லியன் என குறிப்பிடுகின்றது இப் பணமானது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணணி கற்றை நெறிக்கான பதிவுக்கட்டணம் மூலமும் மாணவர்களால் முன்னரே செலுத்தப்பட்ட தவணைக கொடுப்பனவு மூலமாகவும் பெறப்பட்டதாகும். மொத்த மீதியும் முதலீடு செய்யப்பட முடியாது ஏனெனில் கருதத்தக்க சதவீதமானது விரிவுரைக் கொடுப்பனவுக்காகவும் மற்றும் பிற செலவுகளுக்காகவும் வைத்திருக்கப்பட வேண்டும். செலவீனங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர் மீதித் தொகையானது 2016ம் ஆண்டு முதலீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கணக்காய்வு அவதானத்துக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, வெளிவாரி பாடநெறிகளில் இருந்து பெறப்பட்ட 2 மில்லியன் ரூபாயில் ரூபா 500,000.00 அன்றாடச் செலவீனங்களுக்காக தக்க வைக்கப்பட்டிருந்தது. அதுவே நடைமுறைக்கணக்கில் மீதியாகவுள்ளது. மீதி ரூபா 1.500,000.00 நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. |
| **4.4 விளைவற்றதும் குறைபயன்பாடுடையதுமான சொத்துக்கள்** | | | |
| (அ) | 2010 யூன் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 05 தீக் காப்பு பெட்டகங்கள் 2015 | பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுக் குழுவின் சிபாரிசுக்கமைய இது தொடர்பிலான விசாரணையொன்று | குறித்த பாதுகாப்பு பெட்டகங்களின் திறப்புக்கள் இடமாறியமை தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | நடாத்தப்பட்டுள்ளது. இவ் ஐந்து தீக் காப்புப் பெட்டகங்கள் தொடர்பில் விரைவான தீர்மானம் எடுக்கப்படும். | அறிக்கையின் அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் முறையான விசாரணையும் நடைபெறுகின்றது. பாதுகாப்பு பெட்டக வழங்குனரிடமிருந்து நகல் திறப்புக்களைப் பெற்று இடமாறியவற்றை பதிலீடு செய்வதற்கும் பெட்டகங்களை பாவனைக்கு கொண்டு வருவதற்குமான அனுமதி பல்கலைக்கழக பேரவையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது பொறியியல் வேலைத்தளத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த வெவ்வேறு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடிய ரூபா 14,060,480 பெறுமதியான 3 –Axis CNC இயந்திரத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கண்காட்சி செயற்பாடுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இருந்தமையால் இவ்வியந்திரம் குறைப் பயன்பாட்டிற்குட்பட்டு காணப்பட்டது. | CNC இயந்திரம் விஞ்ஞானமும் தொழில்நுட்பவியல் பீடத்தினால் விஞ்ஞானமும் தொழில்நுட்பவியல் பட்ட கற்கையில் இயந்திர மின்னணுவியல் பிரிவு மாணவர்களுக்கு தேவையான CAD/CAM செய்முறை அறிவை வழங்கும் நோக்கிலும் அதே போன்று வேறுபட்ட கற்கைநெறி மாணவர்களுக்கு பாட அறிவை வழங்கும் நோக்கிலும் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இந்த இயந்திரத்தில் உள்ள சிறப்பான தொழிற்பாடுகளையும் வசதிகளையும் பல்கலைக்கழக வேலைத்தளத்தில் உள்ள வேறு உபகரணங்களில் இருந்து பெற முடியாது. விஞ்ஞானமும் தொழில்நுட்பவியல் பட்ட கற்கையில் இயந்திர மின்னணுவியல் பிரிவின் மூன்றாம் வருட முதலாவது அரையாண்டில் இவ் இயந்திரம் அறிமுகப் படுத்தப்படுகின்றதுடன் | கல்வி நடவடிக்கைகளுக்காக இவ் இயந்திரம் தற்போது பாவிக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | அதனுடன் தொடர்புடைய சாதாரண சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.<br>மூன்றாம் ஆண்டின் முதலாம் அரையாண்டில் பின்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.<br><br>1. மாணவர்களுக்கு CNC இயந்திரத்தின் தொழிற்பாடு தொடர்பான அறிமுகம் வழங்கல்<br>2. தாமாகவே இயந்திரத்தை இயக்குவதற்கான பயிற்சிகளை வழங்கல்<br>3. குறியிடலில் குறித்த இயந்திரத்தின் தொழிற்பாடு குறித்து மாணவர்களை பயிற்றுவித்தல்<br>4. மாணவர்களின் விருப்புக்கிணங்க அகரவரிசை எழுத்துக்களை CNC இயந்திரத்தை பயன்படுத்தி வெட்டுவதற்கான செயன்முறை பரீட்சையை நடாத்துதல்<br>5. முன் தீர்மானிக்கப்பட்ட அகரவரிசை எழுத்தை CNC இயந்திரத்தை பயன்படுத்தி வெட்டுவதற்கான செயன்முறை பரீட்சையை நடாத்துதல்<br>6. முன் தீர்மானிக்கப்பட்ட உருவம் ஒன்றை CNC இயந்திரத்தை பயன்படுத்தி வெட்டுவதற்கான சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்கல்<br>7. முன் தீர்மானிக்கப்பட்ட உருவம் ஒன்றை CNC இயந்திரத்தை பயன்படுத்தி வெட்டுவதற்கான செயன்முறை பரீட்சையை நடாத்துதல்<br><br>இவ் இயந்திரத்தின் தொழிற்பாடு தொடர்பான ஆழமான விடயதானங்கள் | |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் அதனோடு இணைந்த செயன்முறைச் செயற்பாடுகள் மூன்றாம் வருட அரையாண்டு முழுவதும் நான்காம் ஆண்டு முழுவதும் பரவியுள்ளன. நான்காமாண்டு மாணவர்களால் இவ் இயந்திரம் ஆய்வுநடவடிக்கைகளுக்காக பல்வேறு வழிகளிலும் பயன்படுத்தப்படுகின்றது.<br>**CNC இயந்திரத்தின் பயன்பாடும் எதிர்கால சந்தர்ப்பங்களும்**<br>2017ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள பொறியியல் தொழில்நுட்ப பட்டகற்கைக்கு சேர்க்கப்படும் மாணவர்களால் இவ் இயந்திரம் மிகவும் பரவலான வழியில் பயன்படுத்தப்படவுள்ளதுடன் (4 வருடங்களில் உள்ள 75 மாணவர்கள்) அந் நிகழ்ச்சித்திட்டத்துக்கான பாடத்திட்டமும் தற்போது தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது. அதே நேரம் இப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் தேவைகளை கட்டுபடியாகக்கூடிய விலையில் பூர்த்தி செய்வதற்காகவும் இவ் இயந்திரம் கிடைக்கக்கூடியதாகவிருக்கும். அடையாளம் காணப்பட்ட சேவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br>1. பிளாஸ்ரிக் உற்பத்தி - அச்சுக்களை வடிவமைப்பதற்கு<br>2. மின்னியல் ஆழி மற்றும் பொருத்திகள் உற்பத்தி - அச்சுக்களை வடிவமைக்கவும் பலவகையான உலோக | |

| | | | |
|---|---|---|---|
| | | பாகங்களுக்கும்<br><br>3. இறப்பர் உற்பத்தி - அச்சுக்கள் அணைப்புக்கள் பொருத்துக்கள் தயாரிக்க<br><br>4. தானியங்க கைத்தொழில் - பல்வேறு விதமான இயந்திர பாகங்களை தயாரிக்க<br><br>5. ஆடைக் கைத்தொழில் - நெசவு இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் பலவகையான இணைப்புக்களை உருவாக்குவதற்கு | |
| (இ) | பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 222,768 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2013 ம் ஆண்டு Tally எனப்படும் கணக்கியல் கணணி மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் நிதிப்பிரிவில் அப்போது இணைக்கப்படடிருந்த பயிலுனர்களுக்கு மட்டும் அது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. அவர்களின் ஆறு மாத கால பயிற்சி முடிவில் அவர்கள் வெளியேறி விட்டார்கள். அப்போது நிதிப்பிரிவில் நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தால் இவர்களுக்கே அறிவையும் பயிற்சியையும் வழங்க வேண்டியிருந்தது. | இவ் கணக்காய்வு அவதானம் தொடர்பில் முதலில் வழங்கப்பட்ட பதிலில் எந்த மாற்றமும் இல்லை. |
| **4.5 ஒப்பந்த செயற்பாடு** | | | |
| தேசிய கொள்வனவு முகவராண்மையின் 08 ஆம் இலக்கம் மற்றும் 2006 சனவரி 25 ஆந் திகதிய வழிகாட்டிக் கோவையினதும் ICTAD SBD/01 33.6 ஆம் பந்தியின் பிரகாரமும் நிர்மாணங்கள் வழங்கப்படதன் பின்னர் சேவைநாடுனர் நிறுவனம் மற்றும் ஒப்பந்தக்காரருக்கிடையே | | பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கட்டுமாண நிலையில் “கொடுப்பனவு விகிதங்களுக்கான நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி கிடைக்கும் வரை எந்த உடன்படிக்கைகளும் எட்டப்படுவதில்லை” எனும் அடிப்படையில் தொடர்புடைய | தொடர்புடைய விலைகள் தொடர்பில் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும். தற்போது வழங்கப்பட்டுள்ள சகல ஒப்பந்தங்கள் தொடர்பிலும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தின் நிர்மாணங்கள் மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்திற்கு வழங்கும் (CECB) போது உடன்படிக்கைளை மேற்கொண்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் மற்றும் இதர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எப்படியிருந்தாலும் செயற்பாட்டில் உள்ள அனைத்து ஒப்பந்த வேலைகள் தொடர்பிலும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. | |
| **4.6 மனித வள முகாமைத்துவம** | | | |
| | பல்கலைக்கழகத்தின் பீடங்களில் அங்கீகரிக்கப்பட்ட 10 பேராசிரியர்களின் பதவிகளும் கால்நடை விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம், மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடம் என்பவற்றிற்காக 180 அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர் பதவியணியில் 40 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் முகாமைத்துவ பீடத்தில் 07 விரிவுரையாளர்கள் மிகையாக காணப்பட்டனர். மேலும் 2006 யூன் 06 ஆந் திகதிய 876 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியில் 70 வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு இருக்கவில்லை. | பேராசிரியர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் எந்த வித விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்படவில்லை அதனடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவது என்பது சாத்தியமானதாகவிருக்கவில் லை. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன் எப்படியிருந்தாலும் வெளிவாரி அடிப்படையில் அவசியமான சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பெறப்பட்டு கல்வி நடவடிக்கைகள் நடாத்தப்படுகின்றன. போதனை சார்ந்த பதவணியினரில் பெரும்பாலான வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன. குறித்த கற்கைநெறிகளுக்காக அனேக பல்கலைக்கழககங்களின் பீடங்களினால் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையினாலேயே இவ்வாறானதொரு நிலமை ஏற்பட்டது. அனுமதியைப் பெறுவதற்கான அவசியமான நடவடிக்கைகள் அனைத்தும் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | ஏற்கனவே 80 வீதமான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | | 70 கல்விசார பதவணி வெற்றிடங்கள் உள்ளன என்பது மிகத் துல்லியமானது அல்ல. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன் 2015ம் ஆண்டில் வெற்றிடமாகவிருந்த 80 வீதமானவை 2016ம் ஆண்டு நிரப்பப்பட்டுள்ளன. | |

**கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

| | | |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று குறித்த கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. அத்துடன், நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதிப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிராமையால் வருடாந்த செயல் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடிய முறையில் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டத்தின் மீளாய்வு செயற்பாட்டின் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை செயற்பாட்டு மீளாய்வு கூட்டத்தை கூட்டுவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தவறுகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படும் செயற்பாட்டு மீளாய்வு கூட்டத்தில் கூட்டிணைந்த திட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கும் விலகல்களை சீர்செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன மீளாய்வாண்டின் செயல் | குறிப்பிடப்பட்ட விடயங்கள் விசேடமாக நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் என்பவற்றை உள்ளடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **5.3 உள்ளகக் கணக்காய்வு** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133(2) இன் பிரகாரம் வெவ்வேறு துறைகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆறு மாதங்களுக்கான உள்ளக கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதியையும் ஒன்றாக எதிர்காலத்தில் அனுப்ப நான் நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது பல்கலைக்கழகத்தின் எல்லா பிரிவுகளையும் உள்ளடக்கி ஒரு முறையான உள்ளக கணக்காய்வை மேற்கொண்டுவருகின்றது. இவ் கணக்காய்வு ஐயவினாக்கள் கணக்காய்வாளர் அதிபதிக்கு ஆண்டுக்கு இரு தடவை அறிக்கைகள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன. |
| **5.4 கொள்வனவுத் திட்டம்** | | |
| 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) மற்றும் 4.2.2 பந்திகளின் பிரகாரம் பிரதான கொள்வனவுத்திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு இருக்கவில்லை. | நான் ஏற்றுக்கொள்கின்றேன். கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் இற்றைப்படுத்தல் என்பது சாத்தியமானதாக இருக்கவில்லை. நான் உறுதிப்படுத்துகின்றேன் இவ்வாறான நிலமைகள் எதிர்காலத்தில் ஏற்படாது. | 2016 ம் ஆண்டு மற்றும் 2017ம் ஆண்டுக்கான விரிவான கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| **5. பாதீட்டுக் கட்டுப்பாடு** | | |
| மதிப்பிடப்பட்ட செலவினம், உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 4 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான விலகலும் 09 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 15 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விலகலும் | நான் ஏற்றுக்கொள்கின்றேன். உண்மையான செலவீனத்தை ஒப்பிடும் போது கருதத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன ஏனெனில் சில குறிக்கப்பட்ட தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு பாதீட்டுடன் ஒப்பிடுகையில் யதார்த்தமற்றதாக (அதி கூடியதாக அல்லது குறைந்ததாக) இருந்தது. | இவ் அவதானிப்புத் தொடர்பில் எந்த அளவீடுகளும் செய்யப்படவேண்டிய தேவையில்லை. கணக்காய்வு அவதானம் என்பது ஒரு பகுப்பாய்வு அல்லது மீள்பரிசீலனை ஆகும |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | | |
| **5.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்** | | |
| 2012 செப்தம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்கு குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, கழிவு நீர் மீள்சுழற்சி செய்திட்டத்தினைப் புனரமைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் பல்கலைக்கழகம் தவறியிருந்தது. | கழிவுநீர் மீள்சுழற்சி திட்டம் தொடர்பான வேலைகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தரக் கட்டுப்பாட்டு அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. | குறிக்கப்பட்ட திட்டம் தொடர்பான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளதுடன் தரக் கட்டுப்பாட்டு அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. |

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமை, கணக்கீட்டு குறைபாடுகள் மற்றும் இணங்காத கணக்குகள் காணப்பட்டமை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்யாமை, நிலையான சொத்துப் பதிவேட்டினை முறையாக பராமரிக்காமை. |
| (இ) களஞ்சியக் கட்டுப்பாடு | பலவீனமான இருப்பு முகாமைத்துவம், இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமை |
| (ஈ) பதவியணியினர் நிர்வாகம் | பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை மற்றும் மிகை ஊழியர்கள் காணப்பட்டமை. |
| (உ) செயலாற்றல் | எதிர்பார்த்த இலக்கை அடையாமை |